விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 069 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 14 புதன்கிழமை (26.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அநுர அரசின் கன்னி பட்ஜெட்
# 109 மேலதிக வாக்குகளால்
# நிறைவேற்றப்பட்டது
### ஆதரவாக 155 வாக்குகள் எதிராக 41 வாக்குகள்

(கொழும்பு)

அநுர அரசின் கன்னி பட்ஜெட் 109 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தலைமன்னாரிலிருந்து
## அகதிகளாக தமிழகம் சென்ற நால்வர் மீட்பு

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து அகதிகளாக நால்வர் நேற்று

04ஆம் பக்கம் பார்க்க

## உதவி பிரதேச செயலர் மரணத்தில் சந்தேகம்
### தந்தை பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உயிரிழந்த 6 மாத கர்ப்பவதியான தென்மராட்சி பிரதேச தீக்காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது மயங்கி விழுந்த வவுனியாவை

04ஆம் பக்கம் பார்க்க

## பிரஜா சக்தி திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வறுமையை ஒழிப்பதற்காக பலவித அணுகுமுறைகளைக் கொண்ட ஒருங்

15ஆம் பக்கம் பார்க்க

## உறவுகளின் போராட்டங்களினால்
# பொறுப்புக்கூறல் கோரிக்கை
# சர்வதேச அவதானம் பெற்றுள்ளது
### ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களால் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கை சர்வதேச அளவில் அவதானம் பெற்றுள்ளது என ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



(15ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு
### நெடுந்தீவில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்கில் உழவு இயந்திரம் புரண்டு விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒரு

15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து
## இராணுவ அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர கலந்துரையாடல்


(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி



15ஆம் பக்கம் பார்க்க

## இரட்டை நிலைப்பாட்டில் அநுர அரசு
## வடக்கு இளைஞர்களுக்கு எதிராக பயங்கரவாதச் சட்டம் பயன்பாடு
### சபையில் நாமல் எம்.பி விமர்சனம்



(கொழும்பு)

வடக்கு இளைஞர்களுக்கு எதிராகப் பயங்கரவாதச் சட்டத்தை அநுர அரசு பயன்படுத்தியதை சுட்டிக்காட்டிய நாமல்

04ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துக் களமிறங்குகிறோம்
### தமிழரசுக் கட்சி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஏற்கெனவே எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாகக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் பரிமளம்



மலர்வு 21.08.1948 உதிர்வு 25.02.2025

கூவில் புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பரிமளம் அவர்கள் நேற்று 25.02.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இரத்தினம் தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் அருள்நந்தி (உரிமையாளர் - றோயல் மதுபான விற்பனை நிலையம், சுன்னாகம் வீதி, புத்தூர்), சிவரூபன் (உரிமையாளர் - புலோலி மதுபான விற்பனை நிலையம், கிராமக் கோட்டடி - புலோலி. சிவாஸ் வைன் ஸ்ரோர்ஸ் - திருகோணமலை, T.T.N வைன் ஸ்ரோர்ஸ் - A9 வீதி, கிளிநொச்சி, Phoenix வைன் ஸ்ரோர்ஸ் - முல்லைத்தீவு, ஈரோடு அம்மன் மெஸ் - பம்பலப்பிட்டி, கொழும்பு. Pan Global import and export, Joseph Lane - Bambalapitiya. சிவாஸ் Hotel Restaurant and wedding hall - திருகோணமலை), வாசுகி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரேவதி, லூசியா, கிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதர்சன், வசீகரன், நிரூபா, நிரூஜா, கர்சா, சியாத், அபினா, அபிசன், வரிஸ், கவித், தருணிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சின்னம்மா, புஸ்பமலர், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் றங்கா, லலிதா, ரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26.02.2025 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு, புலோலி.

(C-2337)

தகவல்:
குடும்பத்தினர்

# வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
(சிற்றுண்டிகள்,தோசை வகைகள் தயார் செய்யக் கூடியவர்)

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

(C-2336)

**தொடர்பு : 077 729 2840**

## வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தான சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



### மஹா சிவராத்திரி உற்சவமும் ருத்ரஹோம வழிபாடும்

நேசம் நிறைந்த நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சிவகாயத்ரி சந்நிதானத்தில் மஹா சிவராத்திரி வழிபாடும் ருத்ரஹோம பூஜையும் சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**மஹா சிவராத்திரி உற்சவம்** இன்று 26.02.2025 புதன்கிழமை
**1ம் சாமப் பூஜை** மாலை 6 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து விஷேட பூஜையும் நடைபெறும்.
**2ம் சாமப் பூஜை** இரவு 9.00 மணிக்கு ஆரம்பம்
**3ம் சாமப் பூஜை** இரவு 12.00 மணிக்கு ஆரம்பம்
**4ம் சாமப் பூஜை** அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பம்

மாலை 5 மணி முதல் லிங்கேஸ்வரப் பெருமானுக்கு தண்ணீர் ஊற்றி வழிபாடு செய்து கொள்ளலாம். **ருத்ர ஹோம பூஜை வழிபாடும் அன்னதானமும்** நாளை 27.02.2025 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ருத்ர ஹோம பூஜை ஆரம்பம். தொடர்ந்து விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று உபயகாரர்களுடைய மூதாதையர்களின் பிண்ட வழிபாடு இடம்பெற்று காலை 11.30 மணியளவில் அன்னதானம் நடைபெறும்.

குறித்த வழிபாடுகளில் ஈடுபட்டு வீரமாகாளி தாயாரின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக

**உபயம் : திரு.தம்பியப்பா விஜயகுமார் குடும்பம் (அவுஸ்திரேலியா)**

"தெளிவேயெங் சிந்தனையுள்"

**இங்ஙனம் - கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
முதன்மை பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

(C-2335)

## வீழ்ச்சி

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதன்படி, நேற்று அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 326.72 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 1.96% வீழ்ச்சியைப் பதிவு செய்து, நேற்று 16,345.01 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

இந்தநிலையில், கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்றையதினம் 2.3 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் தம்பிமுத்து



மலர்வு 20.12.1937 உதிர்வு 25.02.2025

கிளிநொச்சி புலோப்பளை பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் தம்பிமுத்து அவர்கள் நேற்று 25.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி, செல்லத்துரை (VMT), கனகரத்தினம் மற்றும் தர்மலிங்கம்(கனடா), தியாகராசா(கிளி), இராசேந்திரம்(ராசா), வேலாயுதபிள்ளை(சிவம் - கொழும்பு), சுந்தரலிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி, செல்வரத்தினம் மற்றும் ஆனந்தலட்சுமி (கனடா), சரஸ்வதி, சரோஜாதேவி(கனடா), தவமணி, முத்துலட்சுமி, புனிதமலர், சரோஜாதேவி(லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் அருள்தேவி, செல்வராணி(ராணி - லண்டன்), கோபாலகிருஷ்ணன்(கண்ணன் - லண்டன்), கிருபாலட்சுமி(லண்டன்), இராசலட்சுமி(லண்டன்), சிறிஸ்கந்தராசா(சிறி), விஜயலட்சுமி(லண்டன்), திருமகள்(திருப்பதி - லண்டன்), உதயமலர்(கலா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஸ்ரீகாந்திதாசன் மற்றும் காராளசிங்கம்(லண்டன்), பரமேஸ்வரி(லண்டன்), காலஞ்சென்ற யோகநாதன்(லண்டன்) மற்றும் வன்னியசிங்கம்(லண்டன்), நிமலதேவி, மகேந்திரம்(லண்டன்), சுப்பிரமணியம்(லண்டன்), கஜேந்திரன்(ஈசன் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நகுலினி, நயாயினி, பிரகதீஸ், சர்மிளா, விஜித்தா, பிறேமினி, ஜனகராஜ், அனித்தா, அநுரன், துளசிகா, பகிரதன், பவித்திரன், துவேரதன், சதீஸ், பானுமதி, பானுவதி, கோபிகா, வஜீகரன், நர்த்தனா, திவ்வியா, தனுசன், மதுசன், நிருசன், ரேஷிகா, டிசானிகா, கௌதம், கபில், சஞ்சய், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரணவ், கபினி, ஜனோசன், அஸ்வினி, திஸ்யா, சாருஜா, கஜனிகா, லட்சுதன், பிரணவ், தியா, பிரனீஸ், ரெகான் சாய், சஸ்வின், கௌஷிகா, பிரணவி, துருவ், லியானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 27.02.2025 வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புலோப்பளை,
பளை.

(C-2334)

தகவல்:
சிறி(மகன்) - 077 717 7305
ராசா - 077 412 4430

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சி தொடர்ந்தால் மின்கட்டணம் உயரும்

## மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)


**தற்போதைய வறண்ட வானிலை தொடர்ந்து நீடித்தால் மின்கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி பொது மக்களுக்கு அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரக் கட்டணங்களை அண்மைய நாட்களில் 20 வீதத்தால் குறைத்தோம். ஆனால், வறட்சி இப்படியே சென்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

மின்சார சபைக்கு எவ்வித இலாபமும் இல்லை. ஒவ்வொரு காலாண்டிலும் விலை மாறும்போது ஒரு மீதி வருகிறது. முந்தைய 6 மாதங்களின் மீதியை அடுத்த 6 மாதங்களுக்கு எடுத்துக் கொள்கிறோம். அதன் மூலம் தான் ஒரு முன்னறிவிப்பு சொல்லப்படுகின்றது. இந்த 6 மாதங்களில் இலங்கை மின்சார சபைக்கு 42 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இந்த வறட்சி அதிகரித்தால் அது மேலும் அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# ஞானசார தேரருக்கு பிணை



(கொழும்பு)

இஸ்லாமிய மதத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிணையில் விடுதலை செய்துள்ளது.

ஞானசார தேரர் தன்னை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாமிய மதத்தை அவமதித்த குற்றத்திற்காக கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றம் ஞானசார தேரருக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பாதீட்டில் அரசாங்கம் யாரையும் கைவிடவில்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பாதீட்டில் யாரையும் கைவிடவில்லை எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரிவினர் தொடர்பிலும் கருத்திற் கொண்டே பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் மேலும் உரையாற்றுகையில்,

புள்ளி விபரங்களுக்கு அப்பால் சென்று பாதீட்டின் பின்னணியில் உள்ள சிந்தனையைப் படிக்குமாறு நாங்கள் உங்களை வலியுறுத்துகிறோம். நமது எதிர்காலப் பாதைக்கு அடிப்படை என்ன? பாதீடு அந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது.

ரணிலின் கொள்கைகளின் நீட்டிப்பை நாங்கள் முன்வைப்பதாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

அந்த வாதத்தை உருவாக்கும் எதிர்க்கட்சி அவர்களின் சொந்த சிந்தனையில் சிக்கிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் எங்கள் தொலைநோக்குப் பார்வையைப் புரிந்து கொள்ளவே இல்லை என்று பிரதமர் தெரிவித்தார். (நி-8)

# சஞ்சீவ படுகொலை சம்பவம்

## சந்தேக நபரின் தாய், சகோதரர் கைது

(கொழும்பு)

கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் "கணேமுல்ல சஞ்சீவ" என அழைக்கப்படும் பிரபல பாதாள உலக நபரான சஞ்சீவ குமார சமரரத்னவின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளினால் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள், குற்றத்திற்கு உதவிய தாகவும், தகவல்களை மறைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட பிரதான பெண் சந்தேக நபரான இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் இளைய சகோதரர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கட்டுவெல்லேகம பகுதியில் வசிக்கும் 23 வயதான பிங்புர தேவகே சமிது திவங்க வீரசிங்க மற்றும் 48 வயதான சேசத்புர தேவகே சாமந்தி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் கூற்றுப்படி, சந்தேக நபர்கள் இருவரும் குற்றம் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தனர். ஆனால் அது தொடர்பில் முறைப்பாடு அளிக்க தவறியதுடன், குற்றவாளிகளுக்கு உதவியதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு உதவியதாகக் கூறப்படும் பெண் சந்தேக நபரான இஷாரா செவ்வந்தியை கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இந்த கைதிகளுடன் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதான நபர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸாரும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# நெல் கொள்வனவுக்கான கடன்;

## வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதாகத் தகவல்

## ஆராயுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ் வாங்கப்படும் நெல்லின் அளவைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சில அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காகப் பெற்ற கடன்களை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதால் இது குறித்து ஆராயுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக 15 பில்லியன் ரூபாய்க்கு அதிகமாக வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் மூன்றாவது முறையாக பாராளுமன்ற வளாகத்தில் ஒன்றுகூடினர்.


இந்த ஆண்டு 2.50000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதோடு சிறு அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் கொள்வனவு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், மீண்டும் அரிசிக்கான பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்க்குமாறு இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)


100 ஆவது ஜனன தினம்

மலர்வு 26 * 02 * 1925

உதிர்வு 29 * 04 * 1982


## அமரர்.சி.செல்லத்துரை அவர்கள்

(முன்னாள் வீரகேசரி நிருபர்)

பேனா முனை கிறுக்கி
பிரபஞ்சம் சிறக்க வைத்த
மானத் தமிழ் மன்னன்
நேரான சிந்தனையால் நெஞ்சுறுதியோடு
தூணாய் நிமிர்ந்து நின்று
தூரநல் நோக்கோடு - தான்
தானாய் இருந்த இளவரசு
கூரான செய்திப் போராளி

ஆய்ந்த தமிழ்ப் பேராளர்
அரசியலின் பெரு மூச்சாளர்
தோய்ந்த சைவப் பேச்சாளர்
தீரர். திறன்கொள் சூரர் - இவர்
ஓய்ந்ததில்லை அலசிப் பிழிந்து
வீரியத்தோடு தேடித் தொகுத்து
சாயாது பக்கம் சாற்றியவர்
சோராது தேசம் விழித்து எழ.

நூற்றாண்டாய் நிலைத்த பெயர்
செல்லத்துரை எனும் செய்திப் புலி
வீறாய் செய்த புரட்சி
செய்தித் துறை கண்ட எழுச்சி - மனம்
ஆறாது தினம் அரற்றுகிறோம்
வெல்லும் நற் பெயரானே !
நூறாயிரம் ஆண்டு நிலைத்திடவே
சொல்வோம் உம் புகழை.





என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

நாவற்காடு, அச்சுவேலி

(882)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனான சென்றலைட்ஸ்





சிறந்த துடுப்பாட்ட வீரர்



சிறந்த பந்து வீச்சாளர்



போட்டியின் சிறந்த வீரர்

சென்றலைட்ஸ் அணி 3 இலக்குகளால் கே.சீ.சீ.சீ அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணம் 2024/25 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் கே.சீ.சீ.சீ அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியை வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

யனுதாஸ் ஆட்டமிழக்காது 41, ஜெயரூபன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சென்றலைட்ஸ் அணியின் பந்து வீச்சில் டார்வின் 22-2, ஜேம்ஸ் 39-2, நியூட்டன் 13-1 என்றவாறு இலக்குளை கைப்பற்றினர்.

129 ஓட்ட வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 17.4 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. செல்ரன் 26, நிரோஜன் 18, கௌதமன் 16, ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கே.சீ.சீ.சீ அணியின் பந்து வீச்சில் துஷ்யந்தன் 18-3, சாம்பவன் 32-2, பிரதீஸ்16-1 என்றவாறு இலக்குகளை கைப்பற்றினர்.

கே.சீ.சீ.சீ அணி வீரர்களான யனுதாஸ் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் துஷ்யந்தன் சிறந்த பந்து வீச்சாளராகவும் சென்றலைட்ஸ் அணி வீரர் டார்வின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சென்றலைட்ஸ் அணி இவ்வருடம் 2 வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## உள்ளூராட்சி...

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதன் மூலமும் எங்களோடு இணைந்து பயணிக்கின்ற கட்சிகள் தனித் தனியே போட்டியிடுவதன் மூலமும் குறித்த தேர்தல் முறையின் கீழ் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## வடக்கு...

எம்.பி அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாட்டையும் பாராளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பாதாள உலக நடவடிக்கைகளைத் தடுக்கப் பயன்படுத்தாது என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் கூறியதைத் தொடர்ந்தே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

பாதாள உலக நடவடிக்கைகளைத் தடுக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று தீர்மானித்தால், வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த இளைஞர்களின் முகநூல் பதிவுகள் மற்றும் சிறிய குற்றச்சாட்டுகளுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது நியாயமா என்று அவர் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வதாக மக்களுக்கு உறுதியளித்தது. மேலும் இந்தச் சட்டத்தின் தவறான பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து அவர்களுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## அகதிகளாக...

தமிழகம் சென்றடைந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுவர்கள் உட்பட 4 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் இராமேஸ்வரம் அரிச்சல் முனை கடலோரப் பகுதிக்கு சென்றடைந்துள்ளனர்.

கடலோரக் காவல்படையின் உதவியுடன் இராமேஸ்வரப் பொலிஸார் இவர்களை மீட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மயங்கி...

சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் வவுனியா - தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த வடிவேலு சற்குணராசா (வயது 61) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபரும் அவரது மனைவியும் நேற்றையதினம் மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதிக்கு வந்திருந்தனர். பின்னர் 1.30 மணியளவில் அருகில் இருந்த வீட்டிற்கு சென்று குளித்துக்கொண்டிருந்த வேளை அவர் மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பலனின்றி 2.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)


## மரண அறிவித்தல்



(C-2339)

### கிருஷ்ணபிள்ளை ஜெயலட்சுமி

வராத்துப்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை ஜெயலட்சுமி அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணன் - லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், சங்கரப்பிள்ளை, பாக்கியம் (கனடா), சின்னமணி மற்றும் ஜீவரத்தினம், மல்லிகா, தவகுலரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பாக்கியம், ராசரத்தினம் (கனடா) மற்றும் மாணிக்கம், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மதுசூதனன், கல்பனா, உமாசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜிதா, சந்திரன், ரெலாகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீன், யாழினி, ரவிராஜ் - நிலோதினி, றசிந்தா - ஜீவதீபன், தணேஷ், மோனிக்கா - பிரசன்னா, ரெலக்ஷன், ரெவின்சன் ஆகியோரின் பேர்த்தியும் பிரியதர்ஷன், பவிதரன், யோசுவாயாஷ், அபிசேக் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2025) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வராத்துப்பளை, பருத்தித்துறை.

உமாசங்கர் (மகன்) - 077 792 4104
ஜீவரட்ணம் (சகோதரி) - 076 073 6019

தகவல்: குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு உண்டு

### யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி.
- பலாலி வீதியில் இருந்து 1Km தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ஊரெழு கிழக்கு முருகன் வீதி முன்பாக.
- செம்மண் இருபது அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை பத்து லட்சம் (10,00000/= ரூபா).

தொடர்புகளுக்கு :

077 468 3354, 077 288 0152

(3523)

## மரண அறிவித்தல்

### திரு. அருணாசலம் சோமசேகரம்



மலர்வு 10.08.1933 உதிர்வு 24.02.2025

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திரு. அருணாசலம் சோமசேகரம் அவர்கள் (24.02.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2025) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (கோவில் வீதி, நல்லூர்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோவில் வீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 6108

(3525)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
ஈழத்துச் சிதம்பரம் துணை

# சிவராத்திரி வழிபாடு எத்தீவினையும் நீங்கும்! நாமும் நலம்பெறலாம்! உலகமும் அமைதி பெறும்! - 26.02.2025

அரிக்கும், பிரமர்க்கும், தேவர்களுக்கும், சித்தர்களுக்கும் மேலான எம் தலைவன் சிவபெருமான் வழிபாடாகிய நாமம் நாமும் திருமுறைகள் ஓதி இன்று ஈழத்துச் சிதம்பரம், திக்கரை முருகன், அமைதியுடன் கும்பாபிஷேகம் காண்போம்

**அரிக்கும் பிரமர்க்கும் அல்லாத தேவர்கட்கும்**
**தெரிக்கும் படித்து அன்றி நின்ற சிவம் வந்து நம்மை**
**உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு உலகமெல்லாம்**
**சிரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டோமே**

**சிவனோடடைவு தில்லைத் திருவாகசம்-237**

திருமாலுக்கும், பிரம்ம தேவனுக்கும், மற்றைய தேவர்களுக்கும் தெரியாது அப்பால் நின்ற திண்ணபுரம், சிதம்பரக்கூத்தன் பரமசிவன் தாமே எழுந்தருளி வந்து நம் மனம் உருகச் செய்து திண்ணபுரத்தில் எம்மை அடிமை கொண்டான் என நாம் சொல்வதைக் கேட்டு உலகத்தவரெல்லாம் வியப்போடு நகைக்கும் படியான நிலையை பாடித் தெள்ளேணம் என்பது இது ஓர் தெய்வத்தன்மை பொருந்திய பாடலாகும்.

"சிவம்" என்ற சொல்லுக்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிப்பவர் என்று பொருள். கோபக்காரர், அழிப்பவர், துடைப்பவர் என்று சொல்வது எவ்வளவு பெரிய (பாவம்) பொய் என்று நாம் உணர வேண்டும். மனித இனம் நலமாக வாழ்வதற்கும் உலகில் அமைதி நிலவவும் அருளார்கள் அருளியுள்ள அறிவுரைகளையும் திருமுறைகளையும் ஓதுவோம்.

விரதம் என்னும் சொல்லிற்குச் சிவராத்திரி நாள் முழுதும் சிவனுக்கு சமீபத்தில் இருக்க வேண்டும். மனம், மொழி, மெய் (உடம்பு)இம் மூன்றும் இவ் அருள்மிகு தினத்தில் சிவத்திடம் இருக்க வேண்டும். இச் சுவாகு குல அரசன் கல்மாசபாதன் என்பவன் சிவராத்திரி விரதம் கடைப்பிடித்துத் தனது **தீராத பாவமாகிய பிரம்மஹத்தி தோசம் நீங்கினார் என்பது வரலாறு கூறும் உண்மை.**

கயிலை மலையில் ஓர் அழகிய பூஞ்சோலையில் வில்வமரத்தின் கீழ், சிவனும் உமையும் எழுந்தருளியிருக்கும் போது அந்த வில்வமரத்தின் மீதிருந்த ஒரு குரங்கு விளையாட்டாக **வில்வ இலைகளைப் பறித்துப் போட கீழே பெருமாளும் பெருமாட்டியும் இருந்ததை அறியாமல் செய்த நாள் மகா சிவராத்திரி ஆகும்.** அறியாமல் வில்வஇலை முடி மேல் போட்டதை எம் பெருமான் அர்ச்சனையாக அந்தக்குரங்கின் மீது **பார்வை அருள் விழ** அக் குரங்கும் **சிவஞானம் உண்டாக** அமைதியாக குரங்கு இறங்கி **அம்மையப்பரை வணங்க, உடனே எம் பெருமான் "நீ செய்த சிவராத்திரி பூசையால் இவ்வுலகையாளும் அரசனாகப் பிறப்பாய்"** என அருளினார். உடனே குரங்கு "பெருமானே! அரசனாகப் பிறந்து அரசு போகத்தில் மூழ்கி விடுவேன், ஆதலால் **குரங்கு முகத்துடன் பிறக்கும் வரத்தையும் மாறாத அன்பான சிவபக்தியை யான் பெற வேண்டும்"** என்று வேண்ட அவ்வாறே எம் பெருமானும் வேண்டிய வரங்களை அருளினார்.

இக்குரங்கு தான் கருவூரில் சோழர் குலத்தில் குரங்கு முகத்துடன், முசுகுந்தன் (முசுகுந்தன் என்றால் குரங்கு முகம்) எனும் பெயருடன் கருவூரைத் தலைநகராக ஆட்சி செய்து, மாறாது அன்புடன் சிவபக்தியுடன இருந்து, தனது மகனுக்கு முடிசூட்டி விட்டு, கயிலை மலையின் கீழ் பெருமானைக் குறித்துத்தவம் இருந்து, **சிவனடி சேர்ந்து, கணங்களின் தலைவர்களில் ஒருவனானான்.**

திருமறைக் காட்டும் சிவ ஆலயம் சிவராத்திரி அன்று இரவு ஆலய விளக்கில் உள்ள **நெய்யைக் குடிக்க ஓர் எலி விளக்கின் மீது தாவ, திரிதற்செயலாக தூண்ட,** அணையும் நிலையிலிருந்த **விளக்கு சுடர் விட்டு எரிய பிரகாசம் அடைந்த புண்ணியத்தால் மறு பிறப்பில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறக்க எம் பெருமான் அருள் செய்தால்.**

முருகன், சூரியன், இந்திரன், மன்மதன், எமன், சந்திரன், அக்கினி, குபேரன் சிவராத்திரி வழிபாடு செய்து வரம் பெற்றவர்கள்.

திருமால் சிவராத்திரி வழிபாடு செய்து சகராயுதமும், லட்சுமி தேவியையும் பெற்றார், பிரமன் இவ்வழிபாடு செய்து சரஸ்வதியையும் படைப்புத் தொழிலையும் பெற்றார்.

எத் துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கனும் கேட்பினும், தித்தித் தமிதூறும் திவ்விய வாக்கிய **"கந்த புராணம் அடி முடி தேடுபடலம் 100 பாட்டும் தகவு காண்டம்" சிவராத்திரியின் சிறப்பைக் கூறும் சிவராத்திரியில் படிப்போம்.**

1. சிவராத்திரி முதல் சாமம் ஓத வேண்டியது தமிழ் வேதம் சம்பந்தர் அருளிய **உண்ணாமுலை உமையாளோடும்"** பதிக எண் 10 - 2 ஆம் திருமுறையில் "பூ ஆர்மலக் கொவை அடியார் தொழுவர்" பதிக எண் - 63 நாவுக்கரகசர் **"ஓதி மாமலர்கள் தூவி"** தமிழ் வேதம் 4 பதிகம்-63 - **"வட்டனனம் மதி சூடியை"** தமிழ் வேதம் 54 ஆவது பதிகம்

2. இரண்டாம் சாமம்-நாவுக்கரசர் திருத்தாண்டகம் 55, 56, 57 ஆகிய பதிகம் போற்றிப் பதிகம்பூராகவும் **வேற்றாகி விண்ணாகி நின்றாய்** சிவபுராணம்-போற்றித் திரு அகவல் 4 மூலம் போற்றி என்பார் பெ.புராணம் கற்பனை கடந்தசோதி

3. மூன்றாம் சாமம்-திருநாவுக்கரசர் இலங்க புராணம் **"பக்கனைந்து புரிந்து அவர் இட்டிலர்**-திருத்தாண்டகம் **இரு நிலனாய்த் தீயாகி திருமாகி" பில்லிசூனியம், கண்ணேறு, பகை, கோள்கள், விசப்பூச்சிகள் தீங்கு நீக்கும் பதிகம்- "வடியேது திருசூலத்தோறும் தோன்றும்"** இது சிவன் சோதிவடிவாய், ஒளிப்பிழம்பாய், சிவதாணுவாய் நிற்பதை மனக்கண்ணால் நினைந்து ஓதும்' பதிகம் மற்றும் ஐந்தெழுத்துப் பதிகங்கள் 1.**துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்திலும்"** - 2.**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க** 3.**சொற்றுணை வேதியன்"** 4.**மற்றுப் பற்றோனக்கு இன்றி"**

நான்காம் யாமம் ஓத வேண்டியது-திருநாவுக்கரசர் 4 ஆவது வேதம் "வான் சொட்டச் சொட்ட நின்றட்டும் வளங்கியோடயலே" 95 ஆவது பதிகம்-பாவநாசம் பதிகம்" பற்றற்றால் சேர் பழம்பதியை பாசூர்" நிலாய பவளத்தை இன்னும் பல அற்புதங்கள், சிவராத்தியில் தான தருமங்கள், மந்திர செபங்கள், திருமுறைகள் ஓதுவதும், பல நூறு மடங்காகப் பெருகி, இம்மையில் எல்லா நலன்களும் மறுமையில் முத்தியும் (பிறவிமை) என்பது அருளார்கள் அனுபவ உண்மை.

சிவராத்திரி வழிபாடு முன்னோர் காட்டிய வழியில் பசித்து, தனித்துத் தியான, வழிந்திருந்து நாமும் இலங்கை-சிவபூமித் திருநாடும் உலக நாடும் அமைதியும், பெறுவதுடன் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் காரை-களபூமி திக்கரை முருகன் அமைதியுடன் புனரத்தானம் நடைபெற்று கும்பாபிசேக காண்போம். நம் சந்ததிக்கு நல்வழி காட்டியாகிய ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் திருமுறைகள் ஒலிக்குமாறு செய்வது ஓர் சிறந்த சிவப்பணியாகும்.



**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**

# இராசிபலன்

**26.02.2025**
**மாசி 14, புதன்கிழமை**
**திரயோதசி முற்பகல் 10.17 மணிவரை**
**திருவோணம் பிற்பகல் 4.51 மணிவரை**

**சுபநேரம் 4.59-6.29 மணிவரை**
**இராகுகாலம் 12.29-1.59 மணிவரை**
**மகா சிவராத்திரி விரதம்**

**சந்திராஷ்டமம் - புநர்பூசம், பூசம்**

**வளவன்**



புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும்.




நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்புக்கள் மாறும், தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.



எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



மன நிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.



குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.



நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**நேர்மையான எந்த மனிதனும் திடீரென்று பணக்காரன் ஆவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் அங்கத்தவர் தெய்வேந்திரம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவருடைய மகன் சங்கானையைச் சேர்ந்த நிந்தனால்(லண்டன்) கட்டப்பட்ட ஜே/ 181 கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களின் கட்டடத் திறப்பு விழா இன்று புதன் கிழமை பி.ப 4 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

தலைவர் ப.ராகுலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான ஜெ.றஜீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் ம.பிரதீபன், கௌரவ விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி. உதயகுமார் கவிதா, சங்கானை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி க.சசிதரன், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.ஜே.குணதிலக மற்றும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ந.ராமதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

# அபிவிருத்தி வேலைகளை துரிதமாக உரிய காலத்துக்குள் முடிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக ஒப்பந்தகாரர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடபிராந்தியக் கிளையினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பின்போது அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டு வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அதை உரிய காலத்துக்குள் நிறைவு செய்வதுடன், அந்த வேலைகள் உரிய தரத்துடன் இருப்பது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார். இதன்போது இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடபிராந்தியக் கிளையினரால் சில விடயங்கள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டன. மணல் மற்றும் கிரவலைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகளை ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப்போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கான "யாட்" உருவாக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஆளுநர் அதன் ஊடாக இந்த விடயத்தில் தீர்வைக் காணலாம் என்றார்.

மேலும் கடந்த காலங்களில் தங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில் தாமதம் நிலவுவதாகவும், கொடுப்பனவுக்கான பொறிமுறை நீண்டதாக இருப்பதாகவும் நிர்மாணிகள் சங்கத்தால் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

பல அபிவிருத்தி வேலைகளை ஒன்றாக்கி ஒரே கேள்வி கோரலாக அதை வெளியிடும் போது அதனைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாகவும் குறிப்பிட்டனர். அத்துடன் திணைக்களத் தலைவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்த விடயங்களை கவனத்திலெடுப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், சந்திப்புக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். (6-8)

## மகா சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சிவராத்திரி புராணப் படிப்பும் அதனைத் தொடர்ந்து மாலை 5 மணி தொடக்கம் நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

அதே வேளை ஆலய அறநெறிப் பாடசாலை, பாடசாலை மாணவர்கள் மற்றும் கலைஞர்களினதும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ஞான வைரவர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி தின உற்சவ நிகழ்வில் இன்று புதன் கிழமை இரவு 8 மணிக்கு "சிவராத்திரி விரத மகிமை" என்னும் தொனிப்பொருளில் செஞ்சொல்வேந்தர் சைவப் புலவர் செ.த.குமரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (6-8)

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனம் நடத்தும் மகா சிவராத்திரி நிகழ்வு இன்று புதன்கிழமை இல.692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 6 மணி முதல் நாளை வியாழக் கிழமை காலை 6 மணிவரை நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகளும் பஜனையும் அருளுரையும் இடம்பெறவுள்ளது. (6-8)

# கீரிமலை நகுலேஸ்வரருக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா மகாசிவராத்திரி தினமான இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி 6.30 மணிக்கு ஸ்தம்ப பூசையும் 7.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று பகல் 10.15 மணியளவில் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் தேரில் ஆரோகணித்து வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ள காட்சியும் இடம் பெறவுள்ளது. (6-

# போலி ஆவணத்துடன் டிப்பரில் மணல் கடத்தியவர் கைது

(சாவகச்சேரி)

போலியான ஆவணத்துடன் சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் கிளிநொச்சியில் இருந்து போலியான ஆவணத்துடன் யாழ் நோக்கி மணலை ஏற்றி வந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் வழிமறித்து ஆவணங்களை சோதனை செய்த போது சந்தேக நபர் போலியான அனுமதிப் பத்திரத்தைக் கிழித்து எறிந்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் அவரை கைது செய்திருப்பதுடன் புவிச்சரிதவியல் பணியகத்தின் உதவியோடு மேற்படி ஆவணம் போலியானது எனவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (6-8-30)

## வேலணை தீவுப் பகுதிக்கான பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளராக துசாந்தன்



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேசத்திற்கான பிறப்பு இறப்பு மற்றும் தீவுப் பகுதிக்கான விவாகப் பதிவாளராக குணசிங்கம் துசாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேலணை பிரதேசத்திற்கான பிறப்பு, இறப்பு பதிவாளராகவும் மற்றும் தீவுப் பகுதிக்கான விவாகப் பதிவாளராகவும் குணசிங்கம் துசாந்தனுக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனால் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் பிரதிப் பதிவாளர் நாயகம், உதவிப் பதிவாளர் நாயகம் மற்றும் காணி மாவட்ட பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8)


# லொறியில் ஏற்றி வரப்பட்ட 18 மாடுகள் பொலிஸாரால் மீட்பு
## ஒருவர் கைது

(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமாக லொறி ஒன்றில் ஏற்றி வரப்பட்ட 18 மாடுகளை நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டிருப்பதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

யாழில் இருந்து மாடுகளை ஏற்றி வந்த லொறியை சாவகச்சேரி நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்து சோதனையிட்ட போதே மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட மாடுகளில் சில நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் கால்நடை வைத்திய அதிகாரி மூலமாக சிகிச்சைகளை வழங்கியுள்ளனர்.



கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவெளியில் தோன்றுவது

## ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

### எச்சரிக்கும் புலனாய்வு அமைப்புகள்



**(கொழும்பு) — ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுவெளியில் தோன்றுவது அவரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் அடையாளம் கண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

குறிப்பாக நாட்டில் தற்போது நடைபெற்று வரும் பாதாள உலக நடவடிக்கைகள் உட்பட சில நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், அந்த பாதாள உலக நடவடிக்கைகளுக்குப் பின்னால் வேறு ஏதேனும் செல்வாக்கு உள்ளதா என்ற சந்தேகம் பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதன் விளைவாக தொடர்புடைய பாதாள உலக நடவடிக்கைகளுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து புலனாய்வு அமைப்புகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சமீப நாட்களாக மக்களிடம் நெருங்கி வந்து கூட்டங்களை நடத்தி அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த நடைமுறை ஜனாதிபதியின் பாதுகாப்பிற்குப் பொருத்தமானதல்ல என்ற கருத்தையும் சில விமர்சகர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று ஜனாதிபதியும் அரசாங்கமும் கூறியிருந்தாலும் இந்த நேரத்தில் ஜனாதிபதியின் பாதுகாப்பு குறித்த உத்தரவாதம் அளிக்க அவரது பாதுகாப்பு கண்டிப்பாக உறுதிசெய்யப்பட வேண்டும் என்று பல தரப்பினர் கருதுகின்றனர்.

இதன் காரணமாக பொது மக்களுக்கு அருகாமையில் இருப்பதைக் குறைக்குமாறு பாதுகாப்புப் படையினர் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

# இலங்கை-இந்தோனேசியா

## நட்புறவை பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் குஸ்டினா டொபினங் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

அதன்படி புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்த இந்தோனேசியத் தூதுவர் குஸ்டினா டொபினங் இரு நாடுகளுக்கும் இடையிலான 70 வருட நட்புறவை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் புதிய அரசாங்கங்கள் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளதாகவும், இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு அவ்வாறானதொரு வேலைத் திட்டத்தை இந்தோனேசியாவிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இந்தோனேசியா மற்றும் இலங்கைக்கு இடையில் நீண்டகால சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. (நி-8)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BCom,Executive Officer(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், ஆசிரியர்<br>தொ.இ: B/15161 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 61<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Banking Diploma, BBM(Following)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் வேலை, விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14026 |
| பிறப்பு:1992இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>8 இல் செவ்<br>கி.பா:24<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்: BSc, MBA, Senior Operation Analyst(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ: B/15164 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Bsc, MBA, Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12171 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>7 இல் செவ்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Bsc, MSc, PHD Civil Engineer(Australia)<br>எதிர்பார்ப்பு:உயர்பதவிகள்<br>தொ.இ: B/15165 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc, Unior Excutive<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, Accountant, Lecturer<br>தொ.இ: G/13874 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# தேர்தல் ஆணைக்குழுவின் விசேட கூட்டம் நாளை

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசேட கூட்டம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 2 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுமென்றும் அனைத்து நகராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் பிராந்திய சபைகள் பராமரிக்கப்படும் என்று தேர்தல் ஆணையர் ஜெனரல் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வாக்குப்பதிவு ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-8)

# தொடரும் இந்திய மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம்

(சென்னை)

இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ள காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணக் கோரி போராட்டம் நடத்தப்படுகிறது.

இலங்கை கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ள வேலைநிறுத்த போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த 22ஆம் திகதி, இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். மேலும், அவர்களது 5 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.


இந்த மீனவர்களை மார்ச் 7 ஆம் திகதிவரை சிறையில் அடைக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு அனைத்து தரப்பு மீனவர்களிடம் இருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுவிக்க வலியுறுத்தி காலவரையற்ற போராட்டத்தை மீனவர்கள் அறிவித்தனர். இதனால், சுமார் 600 இற்கும் மேற்பட்ட படகுகள் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. மீனவர்களின் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக சுமார் ரூ. 6 கோடி மதிப்பிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாப்பரசர் பிரான்சிஸ் கவலைக்கிடம்

### வத்திக்கானிலிருந்து வெளியான அறிவிப்பு



(வத்திக்கான்)

சுவாசம் மற்றும் சிறு நீரகக் கோளாறுகளால் பாப்பரசர் பிரான்சிஸ் "ஆபத்தான நிலையில்" இருக்கிறார் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.

பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள அவருக்கு மூச்சுக்குழாயில் அழற்சி, சிறு நீரகப் பிரச்சினை இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது.

இதையடுத்து ரோம் நகரில் உள்ள ஜெமிலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக உடனடியாக சேர்க்கப்பட்டார். அவருக்கு, தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில் நிமோனியா பாதிப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் பாப்பரசர் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பில், "புனித தந்தை சுய நினைவுடன் இருந்தாலும், அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. "மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து செயற்கை முறையில் ஒட்சிசன் செலுத்தப்படுகிறது.

இரத்த அணுக்கள் குறைந்து வருவதால், அதற்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது அதிக வலியை அவர் அனுபவித்து வருகிறார்" என கூறப்பட்டுள்ளது. (நி-8)

## கனடாவில் புதிய விசா விதிமுறைகள்

### கேள்விக்குறியாகும் மாணவர்களின் நிலை?

(ஒட்டாவா)

கனடாவில் அதிகளவில் வெளிநாட்டினர் குடியேறுவதை தடுக்கும் நோக்கில் விசா வழங்குவதில் புதிய விதிமுறைகளை அந்நாட்டு அரசு அமுல்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கையால் இலங்கையர்கள், இந்தியர்கள் உட்பட கனடாவில் வசிக்கும் பல்வேறு நாட்டினருக்கு சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பாக புதிதாக கனடாவுக்கு வேலைக்குச் செல்வோர் மற்றும் குடியேற நினைப்பவர்களுக்கும் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் வெளிநாடுகளில் இருந்து வந்து தங்கி கல்வி பயிலும் மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் விசா நிலையை, எந்த நேரத்திலும் மாற்றுவதற்கான அதிகாரத்தை கனடா எல்லைப் படை அதிகாரிகளுக்குஅந்நாட்டு அரசு வழங்கியுள்ளது.

அந்தவகையில் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் கீழ், மின்னணு விசா, தற்காலிக தங்கும் விசா உள்ளிட்டவற்றை மறுக்கவோ, நிராகரிக்கவோ கனடா எல்லைப் படைக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனடாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர் விசா காலம் நிறைவடைந்த பிறகும் அவர் நாட்டைவிட்டு வெளியேறாமல் இருந்தால் அவரது விசாக்காலம் முடியும் முன்பே இரத்து செய்யவும் குறித்த எல்லைப்படைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மாணவர்கள் மற்றும் சட்டபூர்வமாக குடியேறுபவர்களுக்கு கனடா மிகவும் விருப்பமான இடங்களில் ஒன்றாகும். தரவுகளின் படி, தற்போது கனடாவில் உயர்கல்வி படித்து வரும் இந்திய மாணவர்கள் மட்டும் 4.2 லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியா - கனடா இடையே பிரச்சினை நிலவிவரும்சூழலில், புதிய விசா விதிமுறைகளால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சம் இந்தியர்களிடையே நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி-8)

## உக்ரைனு
## ரஷ்யா

(ஜெனீவா)

**உக்ரைன் மீதான**
**நிறைவைக் குறிக்**
**தீர்மானங்கள் ெ**
**ரஷ்யாவின் பக்கம் ந**

இது போரில் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் நிலைப்பாட்டை மாற்றியதை எடுத்துக் காட்டுவதாக அமைந்ததுடன், அமெரிக்கா தனது ஐரோப்பிய நட்பு நாடுகளுடனான கொள்கைக்கு முரணாக செயற்பட்டது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்தன.

ரஷ்யா
இருக்கும்
ரஷ்யாவி
நாபான சீ
உக்ரைன்
களுக்கு
இருந்து வி
அதேே
முழு அ
டுப்பின்
நிறைவி
கிடைத்த
பொதுச்ச
என்று பே
யுறுத்தும்
தீர்மானத்
மறுத்தது.

## கடும் குளிரின் மத்தியிலும் ஒன்று கூடிய மக்கள்

### பாப்பரசருக்காக பிரார்த்தனையில் ஈடுபட்டனர்

(வத்திக்கான்)

உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பரிசுத்த பாப்பரசர் குணமடையவேண்டும் என வத்திக்கானின் சென்பீற்றர்ஸ் சதுக்கத்தில் கடும் குளிரின் மத்தியிலும் ஒன்று கூடிய மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

சென்பீட்டர்ஸ் சதுக்கத்தில் பிரார்த்தனைகளில் ஈடுபட்டவர்கள் பாப்பரசர் பிரான்சிஸின் உடல் நிலைகுறித்து கவலை வெளியிட்டதுடன் அவர் விரைவில் குணமடைவார் என நம்பிக்கையும் வெளியிட்டனர்.

கத்தோலிக்கத் திருச்சபையை புதிய பாதையில் செலுத்தும் அவரது முயற்சிகளிற்காக அந்த மக்கள் நன்றியையும் தெரிவித்தனர்.

வத்திக்கான் பரிசுத்த பாப்பரசரின் உடல்நிலை குறித்து முன்னைய நாட்களை விட நம்பிக்கை அளிக்கக்கூடிய செய்தியை வெளியிட்ட போதிலும் சென்பீற்றர்ஸ் சதுக்கத்தில் காணப்பட்டவர்களின் மனோநிலை பெரும்பாலும் சோக மானதாகவே காணப்பட்டது.(நி-8)



## சமாதானம் என்பதன் பொருள் சரணடைவது என்பதல்ல

### வெள்ளை மாளிகையில் பிரான்ஸ் ஜனாதிபதி



(வோஷிங்டன்)

சமாதானம் என்பதற்கு உக்ரைன் சரணடைவது என்பது அர்த்தமல்ல என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் பாதுகாப்புக் குறித்த உத்தரவாதங்கள் அவசியம் எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நானோ அல்லது அமெரிக்க ஜனாதிபதியோ பலவீனமான சமாதானத்தை விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் அமெரிக்காவும் அதன் ஜனாதிபதியும் பிரான்சின் சிறந்த நண்பர்கள் என தெரிவித்துள்ளார்.

உக்ரைனைப் பாதுகாக்கும் விடயத்தில் ஐரோப்பா தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது என தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி உக்ரைனின் பாதுகாப்பிற்கு ஐரோப்பா சுமார் 128 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. ஏனென்றால் ஐரோப்பாவின் கூட்டுப் பாதுகாப்பின் முன்னணியில் உக்ரைன் உள்ளது என தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மக்களின் பெரும் துணிச்சலை நான் போற்றுகின்றேன் பாராட்டுகின்றேன் என தெரிவித்துள்ள அவர் வலிமை மிக்கவர்களின் விருப்பத்தை திணிக்க கூடிய, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறக்கூடிய உலகில் வாழ்வதற்கு எவரும் விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# னுக்கு ஆதரவான ஐ.நா தீர்மானம்
# ா பக்கம் நின்ற அமெரிக்கா!

**மீதான ரஷ்யப் படையெடுப்பின் மூன்றாம் ஆண்டு குறிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் கள் தொடர்பான வாக்கெடுப்பில் அமெரிக்கா பக்கம் நின்றது.**




ரஷ்யாவுடன் நெருக்கமாக இருக்கும் இந்தியாவும், ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடான சீனாவும் ஐ.நாவின் உக்ரைன் போர் தீர்மானங்களுக்கு வாக்களிப்பதில் இருந்து விலகின.

அதேநேரம் ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவில் உக்ரைனுக்கு கிடைத்த வெற்றியில் ஐ.நா பொதுச்சபை கடந்த திங்களன்று போரை நிறுத்த வலியுறுத்தும் அமெரிக்க ஆதரவு தீர்மானத்தை அங்கீகரிக்க மறுத்தது.

மொஸ்கோவின் ஆக்கிரமிப்பைக் குறிப்பிடத்தவறியதால் சபை உறுப்பினர்கள் வோஷிங்டனின் தீர்மானத்தை ஏற்க மறுத்துவிட்டனர்.

அதற்கு பதிலாக அவர்கள் ஐரோப்பிய ஆதரவுடன் கூடிய தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தனர்.

இது ரஷ்யா உடனடியாக உக்ரைனிய பிரதேசங்களில் இருந்து தனது படைகளை திரும்பப் பெற வேண்டும் என்று கோருகிறது.

இதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் எதிர்த்தது.

வோஷிங்டன் அதன் முன்மொழிவுக்கு ஆதரவாக தங்கள் தீர்மானத்தை திரும்பப் பெறுமாறு உக்ரைன் மீது அழுத்தம் கொடுக்க முயன்றது.

மூன்று ஐரோப்பிய முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன் உக்ரைன் மறுத்துவிட்டது.

193 உறுப்பினர்களைக் கொண்ட உலக அமைப்பில் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு பின்னடைவாக 93 வாக்குகளால் திருத்தப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உக்ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு தனித் தீர்மானமும் ஆதரவாக 93 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்கா ரஷ்யா, இஸ்ரேல் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளுடன் சேர்ந்து வாக்களிக்கவில்லை.

தீர்மானங்கள் சர்வதேச அளவில் உக்ரைனுக்கான ஆதரவு குறைந்து வருவதைக் குறிக்கிறது.

முன்னதாக ஐ.நா. பொதுச் சபை உக்ரைனிய தீர்மானங்களை அதிக பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது. சில சமயங்களில் 140 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ரஷ்யாவைக் கண்டிக்கும் போது அவற்றை ஏற்றுக் கொண்டனர்.

இந்த தீர்மானங்கள் சட்டபூர்வமாக பிணைக்கப்படவில்லை, ஆனால் உலகத் தலைவர்களின் தீர்மானமாக அடையாளமாக பார்க்கப்படுகின்றன.

ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேட்டோ அதிகாரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

ானத்தை
என குறிப்
அமெரிக்
ஜனாதி
ன் சிறந்த
தெரி வித்

பாதுகாக்
ஐரோப்பா
பை நிறை
என தெரி
ன்ஸ் ஜனா
னின் பாது
பா சுமார்
டொலர்
ய்துள்ளது.
ராப்பாவின்
பின் முன்
ரன் உள்
த்துள்ளார்.
மக்களின்
லை நான்
ன் பாராட்
தெரிவித்
ின்மை மிக்க
நப்பத்தை
,சர்வதேச
ரிக்கப்பட்ட
மீறக்கூடிய
தற்கு எவ
ல்லை என
(நி-8)

---

## பிரான்சில் உள்ள ரஷ்ய தூதரகம் மீது குண்டுவீச்சு




(பாரிஸ்)


பிரான்சின் மார்சேய் நகரத்தில் உள்ள ரஷ்ய துணைத் தூதரகத்தின் மீது இனந்தெரியாதவர்கள் பெற்றோல் குண்டுத் தாக்குதலை' மேற்கொண்டுள்ளனர். துணைத்தூதரக கட்டடத்தின் மீது இரண்டு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதாக பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது பெட்ரோல் குண்டு வெடிக்கவில்லை என ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சேதங்கள் அல்லது காயங்கள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகாத அதே வேளை அந்தப் பகுதியை சுற்றிவளைத்து போக்குவரத்தை தடைசெய்துள்ள பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது பயங்கரவாதத் தாக்குதல் போல தோன்றுவதாகத் தெரிவித்துள்ள ரஷ்யா முழுமையான விசாரணையைக் கோரியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றுடன் மூன்று வருடங்களாகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

## நான்கு மாதங்களின் பின்னர்
## ஹிஸ்புல்லா தலைவரின் இறுதிக்கிரியைகள்



(லெபனான்)

லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் இறுதிக் கிரியைகள் ஆயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றுதலோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை லெபனானில் இடம்பெற்றன.

லெபனானின் தஹியாவிலுள்ள ஹிஸ்புல்லாவின் தலைமையகம் மீது இஸ்ரேல் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற் கொண்ட விமானத் தாக்குத லில் நசரல்லா கொல்லப்பட்டார்.

என்றாலும் சுமார் நான்கு மாதங்கள் கடந்த பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹஸன் நசரல்லாவினதும் அவர் கொல்லப்பட்டதோடு அந்த அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்ற காசெம் சபயிடியினதும் இறுதிக் கிரியைகளும் இடம்பெற்றன.

லெபனானின் கமிலி சமிலி விளையாட்டரங்கில் இடம் பெற்ற இந்த இறுதிக் கிரியைகளில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாசி, சபாநாயகர் முஹம்மட் பாக்கர் காலிப் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் அடங்கலாக ஈரான், ஈராக், ஜேர்மன் உட்பட பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இந்த இறுதிக் கிரியை நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது இஸ்ரேலின் யுத்த விமானங்கள் தாழப்பறந்துள்ளன.

ஹிஸ்புல்லாவின் நிறுவனர்களில் ஒருவரான ஹசன் நசரல்லா, கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் அந்த அமைப்பை வழிநடத்தி, இராணுவ அமைப்பாகவும் லெபனானை ஒரு பெரிய அரசியல் சக்தியாகவும் உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த வாழ்வு தரும் சிவராத்திரி

சிவராத்திரி என்பது சிவனுக்கான இரவு. அந்த சிவராத்திரி ஐந்து வகையாகக் கூறப்பட்டுள்ளது.

**01. நித்திய சிவராத்திரி:** ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபட்ச, சுக்லபட்ச சதுர்த்தசிகளில் வருவது நித்திய சிவராத்திரிகள். இது போல் மாதம் இரண்டு முறை வரும் நித்திய சிவராத்திரி விரதத்தை தொடர்ந்து 24 முறையும் அனுசரிப்பதே நித்திய சிவராத்திரி விரதம் ஆகும்.


**02. பட்ச சிவராத்திரி:** தை மாதம் கிருஷ்ண பட்ச பிரதமை முதல் 13 நாட்கள் ஒரு நேரம் மட்டும் உணவு உண்டு 14ஆம் நாளான சதுர்த்தசியில் முழு நேர உபவாசம் இருப்பது பட்ச சிவராத்திரி ஆகும்.

**03. மாத சிவராத்திரி:** ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திதியில் வருவது. சித்திரை மாதம் கிருஷ்ணபட்ச அஷ்டமியில், வைகாசி மாதம் சுக்ல பட்ச அஷ்டமியில், ஆனி மாதம் சுக்லபட்ச சதுர்த்தியில், ஆடி மாதம் கிருஷ்ணபட்ச பஞ்சமியில், ஆவணி மாதம் சுக்லபட்ச அஷ்டமியில் புரட்டாசி மாதம் சுக்ல பட்ச திரயோதசியில், ஐப்பசி மாதம் சுக்லபட்ச துவாதசி யில், கார்த்திகை மாதம் சுக்லபட்ச சப்தமியில், மார் கழி மாதம் சுக்லபட்ச சதுர்த்தசியில், தை மாதம் சுக்ல பட்ச திருதியையில், மாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த் தசியில், பங்குனி மாதம் சுக்லபட்ச திருதியையில் வருவது மாத சிவராத்திரி என்றழைக்கப்படும்.

**04. யோக சிவராத்திரி:** சோமவார நாளன்று (திங்கட்கிழமை) பகல், இரவு முழுவதும் அமாவா சையாக பொருந்தி வந்தால் அது யோக சிவராத்திரி.

**05. மகா சிவராத்திரி:** பெரும்பாலான சிவராத் திரிகளை கூர்ந்து கவனித்தால் அவை சதுர்த்தசி திதியில் வருவது தென்படும். ஏன் அப்படி? அமாவாசைக்கோ பௌர்ணமிக்கோ முன்பு பதினான்காம் நாளாக வருவது சதுர்த்தசி. அந்த நாள் சிவனுக்குரியது என்பது சாஸ்திரங்கள் கூறும் செய்தியாகும். ஒவ்வொரு தெய் வத்துக்கும் அவரவர்க்கேற்ற திதியை ஒதுக்கி வணங்கும் போது சிவனுக்கு ஒதுக்கப்பட்டது தான் சதுர்த்தசி. இந்த சதுர்த்தசி கிருஷ்ணபட்சமானால் மறுநாள் அமாவாசை. அதே சுக்லபட்சமானால் மறுநாள் பௌர்ணமி. தொடக்கம், முடிவு இரண்டுமே அந்த சிவனால் தான் என்பதை உணர்த்தவே இந்த திதி சிவனுக்காக ஒதுக்கப்பட்டது.

சிவன் என்றால் மங்களம் என்று பொருள். ராத்திரி என்றால் இரவு. எனவே மங்களகரமான இரவு என்று மகாசிவராத்திரியை சொல்லலாம். எல்லா வகையான



சிவராத்திரிகளிலும் மேலானதும் வருடம் ஒரு முறை மட்டுமே வருவதும் அனைத்து விதமான பாவங்களையும் நீக்கி நல்வாழ்வை தருவதும், எல்லா நலன்களையும் தரக்கூடியதுமான வார்த்தை களால் விவரிக்க முடியாத பெருமை பெற்றது தான் மகா சிவராத்திரி.

ஐந்து வகை சிவராத்திரியையும் அனுஷ்டிக்கலாம். முடியாதவர்கள் அவசியம் வருடம் ஒருமுறை வரும் மகா சிவராத்திரி அன்றாவது விரதம் இருப்பது பல னைத் தரும். மகா சிவராத்திரியின் சிறப்பை வாதூ லம் முதலான ஆகமங்களும், சிவபுராணம், சுந்தர புராணம், பத்மபுராணம் முதலான புராணங்களும் கூறுகின்றன. சிவராத்திரி தினத்தன்று முழு உபவா சத்தை கடைப்பிடிப்பதால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என புரா ணங்களில் கூறப்பட்டுள்ளது.

## சிவராத்திரி நாளில் செய்யவேண்டிய வழிபாடுகள்

**சிவராத்திரியில் செய்ய வேண்டிய வழிபாடு பற்றி லிங்கபுராணத்தில் கூறப்பட்டிருப் பதாவது:-**

**01.** சிவபெருமானைத் தீர்த்தவாரி செய்ய வேண்டும்.

**02.** மணம் மிகுந்த மலர்களை சிவபெருமானின் உச்சி முதல் கால் வரை தூவ வேண்டும். தூவும் பொழுது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதவேண்டும்.

**03.** மந்திரம் ஓதிக் கொண்டே சிவபெருமானை வலம் வந்து வணங்கவேண்டும்.

**04.** சிவாலய வளாகத்தை துடைப்பத்தால் பெருக் கித் தூய்மை செய்து கோலமிடுதல் வேண்டும்.

**05.** நீர், பால், நெய் முதலியவற்றால் சிவபெரு மானை அபிஷேகம் செய்ய வேண்டும்.

**06.** சிவபெருமானுக்கு நல்ல தூய்மையான ஆடை அணிவிக்க வேண்டும்.

**07.** எருக்க மலர் மாலைகளை சிவபெருமான் தலை யில் வட்டமாக அணிய வேண்டும்.

**08.** சிவ தண்டமான கட்டாங்களும், கபாலமும் ஏந்தி அவன் புகழைப் பாட வேண்டும்.

**09.** ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். பெண்கள் ஐந்தங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

**10.** விபூதி அணிந்து சிவனைப் போற்ற வேண்டும்.

## பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான நிலையத்தில்
# சோமநாதர் லிங்க தரிசனம்

யாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி. பாரதத்தின் வெவ் வேறு மாநிலங்களிலுள்ள மிகவும் மகிமைவாய்ந்த பன்னிரு ஜோதிலிங்கங்களில் சோமநாதர் லிங் கத்தை தரிசிக்கும் பாக்கியம் யாழ் மக்களுக்குக் கிட்டியுள்ளது. அத்துடன் அனைத்துப் பிரச்சினை களையும் வெல்லும் வகையில் ஆன்மீகக் கண் ணைத் திறக்கவல்ல படவிளக்கக் கண்காட்சி, மனச்சுமையை இறைவனிடம் கொடுப்பதற்கான ஆன்மீக யாககுண்டம், இறைவனுடன் நெருக்க மான அனுபவத்தைப் பெறுவதற்கான தியானம் போன்றவற்றை மக்கள் முற்றிலும் இலவசமாக அனுபவம் செய்யலாம். ஏராளமான ஆன்மீக நூல்களும் தியான, பாடல் இறுவெட்டுகளும் விற்பனை செய்யப்படவுள்ளன. 213, பிறவுண் வீதி (கலட்டி சந் திக்கு அருகில்) கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்கி 28ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மக்கள் சோமநாதர் ஜோதிலிங்கத்தை தரிசித்தருள் பெறலாம்.

• பொதுவாக, பாரதத்தைப் பொறுத்தவரையில் பன்னிரு ஜோதிலிங்கங்கள் போற்றப்பட்டு வருகின்றன. அவையாவன, குஜராத்திலுள்ள சோமநாதர், ஆந் திரா மாநிலத்தில் உள்ள மல்லிகார் ஜீன், மத்தியப் பிரதேசத்திலுள்ள மகாகாலேஸ்வரர், மத்தியப் பிரதேசத் தில் உள்ள, ஓங்காரேஸ்வரர், இமயமலையிலே வீற் றிருக்கும் கேதாரநாதர், மகாராஷ்டிராவில் உள்ள பீமாசங்கர், மகாராகூஷ்டிராவில் உள்ள கிருஷ்ணேஸ் வரர், இராமேஸ்வரத்திலுள்ள இராமேஸ்வரர், குஜராத் திலுள்ள நாகேஸ்வரர், ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள வைத்திய நாதர், மகாராஷ்டிராவில் உள்ள திரியம்ப கேஸ்வரர், உத்தரப் பிரதேசத்தில் விஸ்வநாதர்.

சிவன் அழியாத ஞானம் என்னும் அமிர்தத்தைக் கொடுத்து, மனித ஆத்மாக்களைத் தெய்வீகக் குணங்கள் நிறைந்த தேவர்களாக்கி, சுவர்க்க வாழ்வு கொடுக்கின்றவரான குஜராத்திலுள்ள சோம நாதர் லிங்கத்தை தரிசிக்கும் பாக்கியம் யாழ் மக்களுக்கு கிடைத்துள்ளது.

**ஞானக் கண்ணைத் திறக்கவல்ல இராஜ யோகப் படவிளக்கக் கண்காட்சி**

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? என்னுடைய உண்மையான, நான் இழந்த, ஆனால் நான் வாழ்வில் வெற்றி பெறத் தேவையான குணங்களாகிய அன்பு, அமைதி, தூய்மை, சந்தோ ஷம், கருணை, ஞானம், சக்திகளை நான் மீண்டும் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம், எனது வாழ்வில் நிக ழும் நிகழ்வுக்கான காரணம் என்ன? இறைவனு டனான எனது சம்பந்தம் என்ன? என்னுடைய எதிர்காலம் மேன்மையாக இருக்க நான் செய்ய வேண்டியது என்ன? நாளைய உலகின் நிலை என்ன? என்ற பல கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் வகையில் எவரும் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் இராஜயோக படவிளக்கக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**மனக்கவலைகளைக் கையளிப்பதற்கான ஆன்மீக யாககுண்டம் :**

மனக்கவலைகள் எம்மை அரித்துக் கொண்டிருந் தால் நம்மால் சகஜமாக வாழ்க்கைக்கு முகங்கொடுக்க முடியாதிருக்கும். எங்கள் கவலைகளை இறைவனிடம் கையளித்து, சுமை நீங்கி, நாங்கள் இலேசானவர்கள் ஆகுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**இறை தியான அனுபவம்:**

அத்துடன் மக்கள் அமர்ந்திருந்து தியானத்தின் மூலம் அமைதியையும், ஆத்மசக்தியையும் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வுகள் அனைத்தும் முற்றிலும் இலவசமானது. இன, மத, மொழி பாகுபாடின்றி அனைவரும் சமூக மளிக்கலாம்.

**பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான நிலையம்,
இல.211, 213, பிறவுண் வீதி,
(கலட்டி சந்திக்க அருகில்), யாழ்ப்பாணம்.**

# மஹா சிவராத்திரி



ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தை
ஓதுவர் உள்ளத்தில் கனிந்து வரும் ஈசனே
ஓம் சிவாயநம எனும் திருநாமத்தை கூறும்
நாவில் ஓடோடி வந்தருளும் மகேசனே

அடி முடி தேடியவர்க்கு ஜோதியாய் தோன்றிய சிவனே
அருவுருவமாய் நின்று அருள் தந்த சிவனே
அருள் லிங்கோற்பவ காலத்தில் தரிசனம் தந்திடும் சிவனே
அருள் சித்தத்தை சிவமயமாக்கும் சிவனே

முத்தான மூன்று தள வில்வம் சாத்தி
கோடான கோடி நன்மை தரும் வில்வாஷ் டகம் ஓதி
ஜோதி லிங்கேஸ்வரரை நாமும் துதித்தால்
மங்களம் தேடி வரும் மனதினிலே
மாதொருபாகனே மாதவம் செய்தேனோ
மாசற்ற அருமருந்து விரதம் சிவராத்திரி
இமை மூடாது உம்மை போற்றும் ராத்திரி
இன்னல்கள் நீக்கிடும் சிவராத்திரி

அன்பு தரும் ராத்திரி
ஆனந்தமளித்திடும் சிவராத்திரி
மேன்மைகள் தந்திடும் ராத்திரி
மெய் மறக்கும் சிவராத்திரி

அண்டமாளும் ஆடலரசே ஒரு வில்வம் சிவார்ப்பணம்
ஆலகால விடம் உண்ட நீல கண்டனே ஒரு வில்வம் சிவார்ப்பணம்
இம்மையில் வாழ நன்மை தரும் முக்கண் ணனே ஒரு வில்வம் சிவார்ப்பணம்
உன்பாதம் சரணடைவோர்க்கு ஈடேற்றம் தந்திடுவாய் ஒரு வில்வம் சிவார்ப்பணம்

**பிரம்மஸ்ரீ.சபா.உமாபதிசர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி மகஜர் கையளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக அதிகரித்து வரும் வழிப்பறி கொள்ளைகள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துமாறு கோரியும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்க பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரனை சந்தித்து கலந்துரையாடியதுடன் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சி பூநகரிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவர் தனது பாடசாலைப் பணிகளை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது பூநகரி சங்குப்பிட்டி வீதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு குறித்த அதிபர் உயிரிழந்தமை உட்பட அதிபர், ஆசிரியர்களை இலக்கு வைத்து இடம்பெறும் வழிப் பறிக் கொள்ளைகள், தாக்குதல் கள் போன்றவற்றால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் மற்றும் சொத்துக்கள் வழிபறிக் கொள்ளையர்களால் கொள்ளையிடப்படுகின்ற சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

இவற்றை கண்டித்து உரிய பாதுகாப்பை பெற்று தருமாறு கோரி மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரனை கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியதுடன் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்புடன் கலந்து ஆலோசித்து அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி-6-8-315)



தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரி தலைமையில் இடம்பெற்றது. (படம்:-தேவானந்தன்)

# ஜே/145 கிராம சேவகர் பிரிவில் உள்ள வீதிகளைப் புனரமைத்து தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவின் வடலியடைப்பு ஜே/145 கிராம அலுவலர் பிரிவின் கீழ் புனரமைக்கப்படாத மற்றும் செப்பனிட வேண்டிய, மீள் தாரிடப்படாத வீதிகளை புனரமைத்து தரக்கோரி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராம அலுவலர் பிரிவின் கீழ் புனரமைக்கப்பட வேண்டிய கலைவாணி வீதியின் கிளை வீதி, விசுவத்தனை வீதி (கிளை வீதி 1,2), காயா வீதி (கிளை 1,2,3,4,5), அரசடி வீதி (1 ஆம் வீதி), நல்லுண்ணி வீதி (கிளை 1), பூம்பந்தை வயல் வீதி (1 ஆம் வீதி), பிள்ளையார் முதலாம் வீதி (கிளை வீதி) மற்றும் தலைவாசல் வீதிகளை புனரமைத்தும் மீள் தாரிடப்பட வேண்டிய பிள்ளையார் 1 ஆம், 2ஆம், புகையிலைச் சங்க, கலை வாணி ஆகிய வீதிகளை செப்பனிட்டுத் தருமாறு கோரியுள்ளனர்.

குறித்த வீதிகளால் அன்றாடம் பயணிக்கும் மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் வீதி சீரின்மையால் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே புனரமைக்க வேண்டிய வீதிகளையும் செப்பனிட வேண்டிய வீதிகளையும் புனரமைக்க உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)

# இரணைமடுக் குளத்தின் கீழ் 19,150 ஏக்கரில் சிறுபோக செய்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் 19 ஆயிரத்து 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையும் அதற்கு மேலாக 382 ஏக்கரில் உப உணவுச் செய்கையும் மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர்செய்கை கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி கனகாம்பிகையம்பாள் ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (6-8-315)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 200-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1500 | 1300 | 1200 | 1100-1200 | 1300 |
| தக்காளி | 100 | 120 | 150 | 80 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 250 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 280 | 400 |
| கரட் | 850 | 800-900 | 800 | 850 | 1000 |
| பூசணி | 150 | 140 | 150 | 100 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 180-200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 600 | 350-400 | 600 |
| வெண்டக்காய் | 300 | 350 | 400 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 250-300 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 300-350 | 400 |
| பீற்றூட் | 300 | 250 | 300 | 150 | 300 |
| கறிமிளகாய் | 1200 | 900 | 1000 | 500-700 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 1500 | 2400 |
| போஞ்சி | 150 | 200 | 300 | 200 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 300 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200-250 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 250 | 250 | 150-250 | 230-270 |
| இராசவள்ளி | 500 | 400 | 500 | 400-500 | 400 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | 40-60 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 160 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 100 |
| [illegible] | 100 | 120 | 70 | 100 | 160 |

# சேதமடைந்த செய்கைக்கான காசோலைகள் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 2024/2025 பருவகாலத்தில் மழை காரணமாக சேதமடைந்த 1340.2 ஏக்கர் வயல் செய்கைக்கான நட்ட ஈட்டு காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 912 விவசாயிகளுக்கான 16.81 மில்லியன் ரூபா நட்ட ஈட்டு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.யு.சரத்சந்திர, கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவிப்பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், கமநலசேவை நிலைய விவசாயிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட மாதாந்த விவசாய கூட்டம் இடம்பெற்றது.

இதில் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 711





இலங்கையில் இந்த சுரத்தினால் பீடிக்கப்பட்டவர்களின் கதியை நான் பார்த்திருக்கிறேன். நியாயமாக இதற்குள் நான் வானவர் உலகத்துக்குப் போயிருக்க வேண்டும்.

அங்கே தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் என்னை வரவேற்று உபசரித்திருக்கக்கூடும் அல்லவா? இன்று தேவர் தேவியர்களுக்கு மத்தியில் உண்மையாகவே அமிர்த பானம் செய்து கொண்டு ஆனந்த மயமாய் இருப்பேன் அல்லவா? அதைத் தாங்கள் கெடுத்து விட்டீர்கள்! வானுலகத்தில் வாசல் வரையில் சென்ற என்னைத் திரும்ப இந்தத் துன்பம் நிறைந்த மண்ணுலகத்துக்குக் கொண்டு வந்து விட்டீர்கள்.

ஆதலின் எனக்குத் தாங்கள் நன்மை செய்ததாகவே நான் எண்ணவில்லை. ஆகையால்தான் தங்களுக்கு நன்றி செலுத்தப்போவதில்லை என்று கூறினேன்!" ஆச்சாரிய பிக்குவின் முகம் ஆனந்தப் பூரிப்பினால் மலர்ந்தது.

"பொன்னியின் செல்வரே! தாங்கள் வானுலகத்துக்குப் போக வேண்டிய காலம் வரும் போது தேவேந்திரனும் பிற தேவர்களும் விமானங்களில் வந்து தேவ துந்துபிகள் முழங்க மலர்மாரி பொழிந்து தங்களை அழைத்துச் செல்வார்கள். ஆனால் அந்தக் காலம் இன்னும் நெடுந் தூரத்தில் இருக்கிறது.

இந்த மண்ணுலகில் தாங்கள் செய்ய வேண்டிய அரும்பெரும் காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன! அவற்றை முடித்து விட்டல்லவா வானுலகம் செல்வது பற்றி யோசிக்க வேண்டும்?" என்றார்.

இதுகாறும் சாய்ந்து படுத்திருந்த பொன்னியின் செல்வன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய திருமுகத்தில் அபூர்வமான களை பொலிந்தது. அவனுடைய விசாலமான நயனங்களிலிருந்து மின் வெட்டுப் போன்ற ஒளிக் கிரணங்கள் அலை அலையாகக் கிளம்பி அந்த அறையையே ஜோதி மயமாகச் செய்தன. "ஆச்சாரியரே! தாங்கள் கூறுவது உண்மை.

இந்த மண்ணுலகில் நான் சில காரியங்களைச் சாதிக்க விரும்புகிறேன். அரும் பெரும் பணிகள் பல செய்து முடிக்க விரும்புகிறேன். இந்தச் சூடாமணி விஹாரத்தை ஒரு சமயம் வெளியிலிருந்து பார்த்தேன். அநுராதபுரத்திலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்தேன்.

அங்கேயுள்ள அபயங்கிரி விஹாரத்தைப் போலப் பெரிதாக இந்தச் சூடாமணி விஹாரத்தைப் புனர்நிர்மாணம் செய்யப்போகிறேன்.

அநுராதபுரத்தில் உள்ள பெரிய பெரிய புத்தர் சிலைகளைப் போன்ற சிலைகளை இந்த விஹாரத்திலும் அமைத்துப் பார்க்கப் போகிறேன், இன்னும் இந்தச் சோழ நாட்டிலுள்ள சிவாலயங்களை அம்மாதிரி புதுப்பித்துக் கட்டப் போகிறேன். இலங்கையிலுள்ள ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பார்த்து விட்டு இச்சோழ நாட்டிலுள்ள ஆலயங்களையும் நினைத்துப் பார்த்தால் எனக்கு உடலும் உள்ளமும் குன்றுகின்றன.

வானளவு கோபுரத்தை உடைய மாபெரும் ஆலயத்தைத் தஞ்சாவூரில் நிர்மாணிக்கப் போகிறேன். அதற்குத் தகுந்த அளவில் மகா தேவருடைய சிலையைச் செய்து நிர்மாணிக்கப் போகிறேன். ஆச்சாரியரே! இந்தச் சோழ நன்னாட்டில் புத்த ஸ்தூபங்களும், சிவாலயங்களின் கோபுரங்களும் ஒன்றோடொன்று போட்டியிட்டு மேக மண்டலத்தை எட்டப் போகின்றன.


ஆயிரமாயிரம் வருடங்களுக்குப் பிறகு இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் பிறக்கும் சந்ததிகள் அவற்றைக் கண்டு பிரமித்து நிற்கப் போகிறார்கள்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒட்டகமும் நரியும்



லம்பா என்னும் ஒட்டகமும் சோட்டு என்னும் நரியும் மிக நெருங்கிய நண்பர்கள். அவை ஒரு அழகான நதிக் கரையில் வாழ்ந்து வந்தன. நதியின் எதிர்க் கரையில் ஒரு கிராமமும் ஒரு கரும்புத் தோட்டமும் இருந்தன. ஒரு நாள் சோட்டுவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

சோட்டு சொன்னது, "ஹே லம்பா அந்த தோட்டத்தில் உள்ள கரும்பு ருசியா இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன், இன்று இரவு ஆற்றை கடந்து தோட்டத்துக்கு போய் விடலாமா" என்று கேட்டது. "ஆனால் கிராமத்தில் உள்ள மக்கள் பார்த்துவிட்டால் நம்மை அடிக்க மாட்டார்களா?" என்று ஒட்டகம் கவலையுடன் கேட்டது. "கவலைப்படாதே நீ எனக்கு உதவி செய், அதே மாதிரி நான் உனக்கு உதவி செய்கின்றேன்" என்று நரி உற்சாகமாக கூறியது. ஒட்டகத்திற்கு அதில் விருப்பமில்லை, ஆனாலும் அதற்கு சம்மதித்தது.

அன்றிரவு ஒட்டகம் நரியை முதுகில் சுமந்து கொண்டு நதியைக் கடந்து சென்றது. அவை கரும்புத் தோட்டத்திற்குள் சென்று சுவையான கரும்புகளைச் சாப்பிடத் தொடங்கின. நிறையச் சாப்பிட்டு அவற்றின் வயிறும் நிறைந்தது. "எனக்கு மிகவும் சந்தோஷமா இருக்கிறது. சந்தோசமா இருக்கும் போதெல்லாம் எனக்கு பாட்டுப் பாட தோன்றும்" என்றது நரி. ஒட்டகம் பதில் சொல்வதற்கு முன்பே நரி சத்தமாக ஊளையிடத் தொடங்கியது. ஒட்டகம் நரியை ஊளை இடாமல் இருக்கும்படி சொன்னது. ஆனால் நரி ஊளையிட்டுக் கொண்டே இருந்தது.

இதைக் கேட்ட கிராம மக்கள் வெளியே ஓடி வந்தார்கள். ஒட்டகம் மிகவும் பயந்து போயிற்று, அது சுற்றும் முற்றும் பார்த்தது நரியை எங்கேயும் காணவில்லை. நரி புதருக்கு பின்னால் போய் ஒழிந்து கொண்டிருந்தது. கிராம மக்கள் ஒட்டகத்தைத் தடியால் அடித்து விரட்டினார்கள். கிராம மக்கள் அனைவரும் சென்ற பிறகு வெளியே வந்த நரி "ஹா ஹா ஹா நல்லா மாட்டிகிட்டியா?, பார்த்தியா உன்னால எங்கேயும் ஒழிஞ்சிக்க முடியவில்லை" என்று கேலி செய்தது.

"சுயநலக்கார நரியே உனக்கு நான் பாடம் சொல்லித்தரேன் பாரு" என்று முணுமுணுத்தது ஒட்டகம். பின்னர் ஒட்டகமும் நரியும் நதியை கடந்து வர ஆரம்பித்தன. நதியின் மையப் பகுதிக்கு வந்த போது ஒட்டகம் ஒன்றும் சொல்லமல் நின்றது.

"உனக்கு பாட்டு பாட தோன்றுகின்ற மாதிரி எனக்கு இப்போது கால் நீட்ட தோன்றுகிறது" என்றது ஒட்டகம். "நான் விழுந்திடுவேன் அப்படி செய்யாதே" என்று கெஞ்சியது நரி. "சுய நலம்புடிச்ச உன்னைப் பற்றி நான் எதற்கு கவலை பட வேண்டும்" என்று காலை நீட்டியது ஒட்டகம், நரி கீழே விழுந்தது.

நீதி : தீய செயல்களால் தீமையே விளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களின் தன்மை மேன்மையடையும் போதே ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைகின்றன.

~ யாரோ

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## நம் அவலம் தீர்வதற்கு இறை வழிபாடு அவசியம்

நாடு குறித்தும் நம் இனத்தின் நிலை குறித்தும் நாம் எவ்வளவுதான் வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தாலும் இறையருளும் நமக்குத் தேவை என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது.

ஆம், மனித வாழ்வு என்பது சாதாரணமானதன்று. இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கையின் நீண்ட பயணத்தில் வெற்றிகளும் தோல்விகளும் இழப்புகளும் நியதிக்குட்பட்டவை.

எனினும் வெற்றியைக் கண்டு கர்வம் கொள்ளாமலும் தோல்வியைக் கண்டு துவண்டு போகாமலும் இழப்புகளால் உளச் சோர்வடையாமலும் வாழ்வதென்பதற்குள்தான் மனித வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது.

எனினும் நம் அன்றாட வாழ்வில் நாம் அறிகின்ற விபரீதங்களும் வாழ முடியாமல் உயிரை மாய்க்கின்ற பரிதாபங்களும் ஏன்? எதற்கு? என்ற விடை இல்லாத கேள்விகளை எழுப்பிக் கொண்டுதான் இருக்கின்றன.

இங்குதான் கடவுளின் அனுக்கிரகமும் தெய்வகடாட்சமும் ஆத்ம பலமும் தேவையாகின்றது.

ஆம், மனித வாழ்வு என்பது அர்த்தமுடையதாக அமைய வேண்டுமாயின், இறைவழிபாடு மிகவும் அவசியமானது.

இதற்காகவே நம் முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து வழிபாடுகளை ஆற்றும் நெறி முறைகளை வகுத்துத் தந்தனர்.

உண்மை. அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கின்ற இன்னல்கள் எங்களைத் தகர்த்துவிடவல்லவை. அத்தகு தருணங்களில் எங்களை ஆற்றுப்படுத்துவது மிகவும் அவசியமானது.

இங்குதான் ஆலய வழிபாடு என்பது மிக உன்னதமான ஆற்றுப்படுத்தலாக அமைகிறது.

இன்றைய சமகாலத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையங்கள் அமையப் பெற்றிருந்தாலும் ஆலயத்துக்குச் சென்று எங்கள் துன்ப துயரங்களைக் கடவுளிடம் எடுத்துக் கூறும்போது, எங்கள் மனக்கவலை கரைந்துபோய் விடுகிறது.

ஆம், ஆலயத்தில் வழிபாடு செய்துவிட்டுத் திரும்பும்போது எங்களை அறியாமலே எங்களுக்குள் மன ஆறுதலும் உத்வேகமும் ஏற்படுவதை நாம் உணர முடியும்.

எனவே இறைவழிபாட்டை எவரும் உதாசீனம் செய்து விடாதீர்கள். அந்தவகையில் இன்று, முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருளை வேண்டி வழிபாடு செய்கின்ற சிவராத்திரி விரத நாளாகும்.

இப் புனிதமான விரதநாளில் ஆலயங்களில் வழிபாடாற்றுவதை நாம் அனைவரும் மேற்கொள்வதுடன் எங்கள் இளம் சந்ததியையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்த வேண்டும்.

இதற்கும் மேலாக, சிவராத்திரி என்பது விழித்திருந்து சிவப்பரம்பொருளைத் தியானம் செய்கின்ற விரதமாகும்.

எனவே இப்புனிதமான விரத நாளில் காலத்தை அவமே கழிக்காமல் இறைவழிபாட்டில் எங்களை ஈடுபடுத்தி மனம், மெய், மொழிகளால் பிறவா யாக்கை பெரியோனாகிய சிவப்பரம்பொருளை வழிபட்டு அவன் திருவருளால் இன்பமயமான வாழ்வைப் பெறுவோமாக.

## யாழ். பொது நூலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி

யாழ்.பொது நூலகத்தைப் புனரமைப்பதற்கு நூறு மில்லியன் ரூபாய் போதாது என யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விடயத்தை நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையிலுள்ள அடிப்படை இனப்பிரச்சினைக்கு காரணம், நாட்டில் காணப்படும் இனவாதமே ஆகும்.

அன்று முதல் இன்று வரை வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தொடர் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், தற்போதைய அரசாங்கமாவது அதற்கு ஒரு தீர்வை முன்வைக்கும் என நாம் நினைத்தோம்.

அதனடிப்படையில் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வடமாகாணத்திற்கு போதுமானதாக இல்லை" என்றார். (ம-7)

## அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை விசாரணைக்கு நாட்டுக்கு அழைத்து வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று இதுகுறித்து அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு அழைத்து வருவதில் அதிகாரிகள் சில சட்ட சிக்கல்களை எதிர் கொள்வதாகக் கூறினார்.

மேலும் அவரை இலங்கைக்கு அழைத்துவர அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அவர் முன்னிலையாகாவிடில் அவருக்கு எதிரான வழக்குத் தொடரும் என்பது உறுதி.

சிங்கப்பூரில் ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதாகக் கூறி அர்ஜுன மகேந்திரன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பாராளுமன்றத்தில் கூறியதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், மகேந்திரன் திரும்பி வருவதை உறுதி செய்வது முன்னாள் ஜனாதிபதியின் கடமை.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி நடைபெற்று இந்தப் பிப்ரவரி மாதம் 10 ஆண்டுகள் நிறைவடைகிறது என்பதையும் அமைச்சர் நளிந்த இதன்போது சுட்டிக்காட்டினார். (ம-7)

## தில்லேஸ்வரத்தில் சிவராத்திரி

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தில் இன்று மகா சிவராத்திரி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

நான்கு சாமப் பூசைகளும் ஹோமங்களும் இடம் பெறவுள்ளன. (ம-7)

## புதிய சட்டம் நிறைவேற்றப்படும் வரை பயங்கரவாதச் சட்டம் பயன்படுத்தப்படும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

புதிய சட்டமொன்று நிறைவேற்றப்படும் வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுமென ஆட்சியமைப்பதற்கு முன்னர் தற்போதைய அரசாங்கம் கூறியிருந்த போதிலும், தற்போதும் அந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவதாக ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, விருப்பமிருந்தாலும் இல்லாவிட்டாலும் தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார். (ம-7)

## சாதாரண விலைக்கு தேங்காயைப் பெற்று கொடுக்க நடவடிக்கை

நாட்டு மக்களுக்கு சாதாரண விலைக்குத் தேங்காயைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி அரசாங்கம் என்ற ரீதியில் தேங்காய் பிரச்சினையை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஊடாக சதொச நிறுவனத்திடம் ஒப்படைத்து இதற்கான தீர்வினைப் பெறவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தற்போது தேங்காயின் விலையானது பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டுள்ளதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் தற்போதைய தேங்காய் பற்றாக்குறைக்குத் தீர்வாக கம்பஹா மாவட்டத்தில் 2.5 மில்லியன் தென்னங் கன்றுகளை நடும் பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேங்காய் பற்றாக் குறைக்குத் தீர்வாக இந்தச் சிறப்பு தேங்காய் சாகுபடி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## நாமல் எம்.பியின் உயிருக்கு அச்சுறுத்தல்

### சாகர காரியவசம்

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க் கிழமை பொதுஜன பெரமுன தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாமல் ராஜபக்ஷவை விரைவில் குழிக்கு அனுப்புவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது இந்தக் கருத்து நாமல் ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

ஆளுந்தரப்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றமை கவலைக்குரியது. நாமல் ராஜபக்ஷவுக்கு பொதுமக்களின் ஆதரவு அதிகரித்து வருவதால் அரசாங்கம் அவருக்கு தீங்கிளைக்கும் நோக்கில் சதி செய்து வருகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். எனவே நாமல் ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாண் தொழில்நுட்பம் 2025: விவசாயிகளின் பிரச்சினைகளும் ஆய்வுக்கருக்களும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விவசாயப் பீடத்தின் சமுதாய மேம்பாட்டுக் குழு வருடாவருடம் ஒருங்கிணைக்கும் 2025 (Agri tech 2025) இவ்வருடம் கடந்த வெள்ளிக்கிழமை (21.02.2025) எதிர்பார்த்தபடி பலவித எதிர்பார்ப்புகளுடனும் தேடுதல்களுடனும் ஆய்வுக்கருக்களுடனும் நிறைவெய்தியிருக்கின்றது.

விவசாயப்பெருமக்களையும்தொழிலதிபர்களையும் பலஅரச, அரச சார்பற்ற மற்றும் சங்கங்களினதும் பங்குபற்றுதலுடனும் விவசாயப்பீட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடனும் விவசாய இயந்திரங்கள், உற்பத்திப் பொருட்கள், நாற்றுக்கள், கன்றுகள், நாற்றுநடும் இயந்திரம், நுண்நீர்ப்பாசனம், நிறைந்த கண்காட்சியுடன் விவசாயப் பெருமக்கள் திணைக்களங்களினது குரலை செவிமடுக்கும் களமாக அமைந்திருந்தது. தென்னிலங்கையின் தனித்துவ நிறுவனமான இலங்கை தொழில் முயற்சியாளர் சபை (SriLanka Inventors Forum) உடனிணைந்து தனக்குரித்தான சின்னத்துடன் பலவகை செயற்பாடுகளை முன்னெடுக்கும் சமுதாய மேம்பாட்டுக் குழு இம்முறையும் அனைத்துப் பங்குதாரர்களையும் இணைத்துவைத்து அவர்களை நேரடியாக களமிறக்கி இம் மேன்மையுறும் கைங்கரியத்தை வெகு சிறப்பாக நடாத்தி முடித்திருக்கின்றது.

இதற்கான தனித்துவமான சின்னத்தை மாணவர்களின் முழுமையான எண்ணத்தினூடாக உருவமைத்தமை பாராட்டுக்குமுரியது. காலை 8.30 இற்கு ஆரம்பித்த நிகழ்வு பீடாதிபதி பேராசிரியர் பகீரதனின் அறிமுக உரையுடனும் அதனைத்தொடர்ந்து PRECIDA – UOJ திட்டத்தின் உலகளாவிய ஜப்பானியக் கூட்டமைப்பு முகவரமைப்பின் (Japan International Cooperation Agency - JICA) விஷேட ஆலோசகர்கள் பேராசிரியர் கோய்ச்சி உசாமி (Prof Koichchi Usami) அவர்களின் விசேட உரையுடனும் பேராசிரியர் ஒகட்டா (Prof Ogatta) அவர்களின் பிரசன்னத்துடனும் ஆரம்பித்தது. தொடர்ந்து விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கான நிகழ்வு நடைபெற்றது.

விவசாயப் பீடத்தின் 7 பிரிவுகளான பயிரியல் விஞ்ஞானம், விலங்கியல் விஞ்ஞானம், விவசாய உயிரியல், விவசாயப் பொறியியல், மண்ணியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம் மற்றும் விவசாயப் பொருளியல் பிரிவுகளை பிரதிபலிக்கும் வகையில் முன்வைக்கப்படும் பிரச்சினைகளை பதிவுசெய்வதற்காக மாணவர்களை ஒழுங்கு செய்து நிகழ்வை விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி அரசகேசரி நெறிப்படுத்தினார்.

விவசாயம்சார் பிரச்சினைகளை விவசாயிகள், விவசாயப்பீட பழைய மாணவர்கள், விவசாயம்சார் தொழிற்றுறையினர், அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்களின் பிரதிநிதிகள் விவசாய ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், பழைய மாணவர்களும் H.N.B வங்கி அலுவலர்களும் இன்னும் பல்வேறு திணைக்களங்களில், நிறுவனங்களில் பணிபுரிந்து இளைப்பாறிய விவசாயிகள் பலரும் இதில் இணைந்திருந்தமை நிகழ்விற்கு சிறப்புச் சேர்த்தது.

மண்டபத்திற்கு வெளியே விவசாய இயந்திரங்கள், மரக்கன்றுகள், சிறுதொழில் முயற்சியாளர் உற்பத்திப் பொருட்கள், விவசாயம்சார் தொழிற்றுறையின் உற்பத்திப் பொருட்கள், இந்திரா குழுமத்தின் காட்சிப்பொருட்கள், விவசாய ஆராய்ச்சி முடிவுகளை பிரதிபலிக்கும் பதாகைகள் எனப் பல வகை காட்சிப்பொருட்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமை நிகழ்வை சிறப்பித்தது.

இந்திரா குழுமத்தின் அனுசரணையுடன் நெல்நாற்று நடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நெல் நாற்று நடுவதிலிருந்து அறுவடை நிகழ்வு வரை காணொளியாக காட்சியாக்கி அதிலுள்ள நன்மைகளையும் சிறப்புகளையும் எடுத்தியம்பியது பயனுள்ளதானதுடன் கலந்து கொண்ட விவசாயிகளை இத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்த ஊக்கப்படுத்தியது.

நிகழ்வில் முன்வைக்கப்பட்ட விவசாயம்சார் பிரச்சினைகளையும் கலந்துரையாடலில் பெறப்பட்ட முடிவுகளையும் வாசகர்களின் தகவலுக்காக தரப்பட்டுள்ளது.

1. வாழையில் வாடல் போன்ற அறிகுறிகள், பியூசேரியம் வாடலாக இருக்குமோ என்ற சந்தேகம். (பதில்) 83களில் கிளிநொச்சி வாழை சம்பிரதாயத்தை நிலைகுலைய செய்த பனாமா வாடல் நோய். ஆனால் வந்தது என்ன நோய் என சரியாகத் தெரியாமல் தீர்வு கூறுவது கடினம். நோயின் அறிகுறியுடனான வாழையின் பகுதிகளை விவசாய உயிரியல் துறைக்கு தந்தால் அதன் தோற்றுவாய் எதுவெனவும் தீர்வும் கூறிவிடலாம். ஒரு சில அறிகுறிகளை வைத்து ஊகிப்பது நல்லதல்ல. பாதிக்கப்பட்ட வாழையின் பாகங்களைத் தந்தால் தீர்வு காண ஏதுவாயிருக்கும்.

2. விவசாயிகளுக்கும் விலங்கு வளர்ப்பவர்களுக்குமான முரண்பாடு. வினா - பொதுவாகவே எழுப்பப்பட்டது. அதனுடன் சுண்டிக்குளம் பகுதியில் 6000 ஏக்கர் தரிசு நிலத்தில் விலங்கு மேய்ச்சல் தரை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




உருவாக்கப்பட்டால் விலங்குகளை உணவுக்காக அழைத்துவந்து மேய விடுதல் இலகுவானதாக இருக்கும். (பதில்) அந்த வினாவுக்கான விடை பற்றி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கேட்கப்படும் எனவும் வடபகுதியில் இனங்காணப்பட்ட இடங்களில் மேய்ச்சல் தரைகள் உருவாக்க இதில் நேரடியாக இணைக்கப்பட்டத் திணைக்களங்களுக்கு விண்ணப்பிக்கப்படும். விலங்கு வளர்ப்பவர்களின் இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமானதும் இருக்கின்ற தரிசுநிலங்களை இனங்கண்டு அதில் வளரக்கூடிய புல்பூண்டு வகைகள் பற்றி ஆய்வு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. தீவனத்திற்காக வளர்க்கப்படும் கோ 3, கோ 4, கம்புநேப்பியர், சிவப்பு நேப்பியர்களில் நுளம்பு வகை ஹொப்பேர்ஸ் காணப்படுவதாகக் கூறப்பட்டது. (பதில்) காணப்படும் பூச்சி வகையை சரியாக இனங்காணாது இதற்கான பரிந்துரையை தருவது சாத்தியமில்லை என்பதனால் அதனை இனங்காண்பதற்கு வளர்ந்திருக்கும் பூச்சிபீடை மற்றும் புற்களின் மாதிரிகளை விவசாய உயிரியல் துறைக்கு தந்துதவும் படி கேட்கப்பட்டது.

4. உவர்நீர்த்தரைகளாகும் இடங்களைத் தெரிவுசெய்து அதில் உவர் நீரில் வளரக்கூடிய அல்லது உவர் நீரினை மேம்மடுத்தி மேய்ச்சல் தரைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் பற்றி வினவப்பட்டது. (பதில்) இது பற்றிய ஆய்வு மேற்கொள் ளப்பட்டு அதன் மூலம் வாய்ப்புக் களை அதிகரிப்பதற்கான வழிவகை கள் ஆராயப்பட்டது. இதனுடன் தொடர் புடைய பல்வகை நிறுவனங்களை இணைத்து இதனை ஆய்வுக்குட்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

5. பன்புல், பன்றிநெல் மற்றும் களைநெல் என்பனவற்றின் அதீத வளர்ச்சி மற்றும் விரைந்து பரவல் என்பன பற்றி வினவப்பட்டது. (பதில்) பன்றிநெல், களைநெல் என்பனவற்றினை இனங்காணல் அவசியமாகின்றது. பன்றி நெல்லின் பரவல் வேறாகவும் களைநெல்லின் பரவல் இப்போதுள்ள நெல்லினத்துடன் கலப்பினப்பாக்கம் செய்யப்பட்டு உருவானதால் இவற்றை பூக்கும் வரை இனங்காணுதல் கடினமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது. களை பிடுங்குபவர்களுக்கு. இந்தப் பன்றிநெல் மற்றும் களை நெல்லினைப் பிரித்துப்பார்ப்பதில் பரிச்சயமிருந்தபோதிலும் அனைத்து நெல் வயல் களிலும் கைகளால் களைகளை கட்டுப்படுத்துவது இயலாத காரியமானதால் இவற்றை வேறுபடுத்தி கட்டுப்படுத்துவது பற்றி ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டது. நெல் வயலை பயிர்செய்யாது விடுதல், பயிர்சுழற்சி செய்தல், விவசாயிகளின் விதை நெல்லை விதை நெல் சுத்திகரிக்கும் நிலையங்களில் களை நெல்லை வேறுபடுத்தி பயன்படுத்தல். இன்னும் ஊதாநிற நெல்லினங்களை பயிரிட்டால் களை நெல்லிலிருந்து பிரித்துப் பார்த்தல் இலகு என்பனவும் கலந்துரையாடப்பட்டது.

இது பற்றிய விரிவான ஆய்வு நடாத்தப்படுவதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

6. வன்னிப்பகுதியிலுள்ள பல சிறிய நீர்த்தேக்கங்கள் குறிப்பாக குளங்கள் காணப்படுவதாகவும் அவற்றில் சிறுதானியங்களை பயிரிடுவது உகந்ததென ஆலோசனை முன்வைக்கப்பட்டது. (பதில்) இதனை விவசாயப் பெருமக்களுக்கு தெரிவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக பரிந்துரை செய்யப்பட்டது. கிடைக்கின்ற நீரை முழுமையாகப் பயன்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சிறுதானியங்களை பயிரிடுவது சாத்தியமென பரிந்துரைக்கப்பட்டதனால் இவற்றைப்பற்றிய அறிவுறுத்தல்களை விவசாயத் திணைக்களத்துடனிணைந்து தயாரித்து அவர்களுக்கு தெரியப்படுத்துவதென ஆலோசிக்கப்பட்டது.

7. முட்டை விலை மாறிக் கொண்டிருப்பதனாலும் கோழி தீவனத்தின் கிடைக்கும் தன்மை விலை குறைவாக இருப்பதற்கான வழிவகைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. (பதில்) கோழித்தீவன உற்பத்தி பற்றி மாற்று வழிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. கொல்லைப்புற கோழிவளர்ப்பில் பயன்படுத்தப்படும் தீவனம் பற்றியும் கோழித்தீவனத்தை உற்பத்தி செய்வதற்கு தேவையான உள்ளீடுகளை உற்பத்தி செய்வது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. வடபகுதியில் கோழித்தீவனத்தை உற்பத்தி செய்வதில் இருக்கின்ற தொழில்நுட்பங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதற்கும் ஆய்வு தேவையாதலால் அதனை ஆய்வுப் பரப்பிற்கு எடுத்துச் செல்வது நல்லதென ஆராயப்பட்டது.

இன்னும் பல வினாக்களை விவசாயப் பெருமக்கள், திணைக்கள அலுவலர்கள் எனப் பலரும் பிரஸ்தாபித்திருந்தனர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திரம்...

வர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நெடுந்தீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நவரட்ணம் ஐங்கரன் (வயது-36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் காவலாளியாகக் கடமை புரிந்து வரும் குறித்த நபர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் உழவு இயந்திரத்தில் பெட்டியைப் பொருத்தியவாறு செலுத்திச் சென்றுள்ளார்.

இதன்போது பெட்டியின் பின் சில்மதகு ஒன்றில் தடுகியதன் காரணமாக உழவு இயந்திரத்தின் இயந்திரப் பகுதி தலைகீழாகப் புரண்டதில் அவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## உதவி பிரதேச...

செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் சதீஸ் தமிழினி (வயது-35) மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த உதவி பிரதேச செயலரின் தந்தையான சண்முகநாதனால் தனது மகளின் உடலில் தீ பற்றியமை தொடர்பில் சந்தேகம் உள்ளதாக கடந்த 23ஆம்திகதி கோப்பாய்பொலிஸ் நிலையத்தில் குறித்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது மரணத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் இது ஒரு இயற்கையான நிகழ்வு அல்ல, மாறாக ஒரு சந்தேகத்திற்குரிய கொலை என்பதை வலுவாகக் காட்டுகின்றன.

இத்தகைய குற்றத்தின் கடுமையான தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை விரைவில் நடத்தப்படுவதை உறுதி செய்யுமாறு வலியுறுத்துகிறோம் என அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## 109 மேலதிக...

அதன்படி வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

இதன்மூலம் 109 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஜனநாயகத்தமிழ்த்தேசியகூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இந்த வாக்கெடுப்பில் இராமநாதன் அர்ச்சுனா, ப.திகாம்பரம், தயாசிறி ஜயசேகர, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட 23 பேர் கலந்து கொள்ளவில்லை.

வரவு செலவுத்திட்டத்திற்கு ஆளும் கட்சியில் இருக்கும் 159 பேரில் 154 பேர் ஆதரவாக வாக்களித்திருந்தனர். அமைச்சர் விஜித ஹேரத் வெளிநாடு சென்றுள்ளதால் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

வரவு செலவுத் திட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஜீவன் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சி, ரவி கருணாநாயக்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி, நாமல் ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.(ம-7)

## பொறுப்புக்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது.

இக்கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் நிலையில், முதலமர்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், இலங்கை தொடர்பில் எதனையும் பிரஸ்தாபிக்கவில்லை.

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் நிலைமாறு கால நீதி நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் இலங்கை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தளங்களில் பங்கேற்று அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அவர்களது கோரிக்கை சர்வதேச அவதானம் பெற்றிருப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இம்முயற்சிகள் சிவில் சமூக அமைப்புக்கள் ஊடாக மேலும் வலுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக பாதிக்கப்பட்ட தரப்பினருடனான பரந்துபட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் கடந்த 2016 ஆம் ஆண்டு நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான ஆலோசனை செயலணியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மீது கவனம் பாய்ச்சுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும்அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பிரஜா...

கிராமிய வேலைத்திட்டமாக "பிரஜா சக்தி" வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதி...

அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இக்கலந்துரையாடலில் மூத்த இராணுவ அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்தாலோசித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொண்டா மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ மற்றும் இலங்கை இராணுவத்தின் பல மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 5758
C 6 4 3 5 8 1
அத சம்பத C 3 5 8 1
சீட்டிழுப்பு இலக்கம் 0333
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1788
C 11 19 30 62 C
Double Chance 35137

மெகா பவர்
திகதி 25/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2106
B 16 14 18 19 28

ஜய
திகதி 2025.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 026
Q 0 0 1 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4000
சீட்டிழுப்பு திகதி 25.02.2025
E 03 56 64 72
E

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2025.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 1067
மிதுனம் 14 29 38 53 மிதுனம்
91649 31

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.02.2025 வெற்றி வாரம் 466
0 5 2 0 7 6 3
75862
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,867,535.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2732
சீட்டிழுப்பு திகதி 2025.02.25 தினம் செவ்வாய்க்கிழமை
04 20 27 56 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,535,604.80

சனிதா
திகதி 25.02.2025 வெற்றி வாரம் 4893
08 32 55 70 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,768,835.60
80183

சசிரி
வெற்றி வாரம் 630
சீட்டிழுப்பு திகதி 25.02.2025 செவ்வாய்க்கிழமை
22 26 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4444
சீட்டிழுப்பு திகதி 25.02.2025 தினம் செவ்வாய்க்கிழமை
33 38 41 43 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.14,549,512.80
147251

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 26 40 41 49 71
1908
25.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,563,202.20

அட கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2558
சீட்டிழுப்பு திகதி : 2025.02.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,797,633.60
17 34 49 68 F
856982


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

1. Jaffna town, இந்து, 1996, சதயம், MSc Software Engineering, New zealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (50423)
2. நயினாதீவு - மல்லாகம், இந்து, 1991, Graduate, சதயம், New zealand Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(28920)
3. புலோலி - கந்தரோடை, இந்து, 1987, பூராடம், MSc, Site engineer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. நயினாதீவு - வேலணை, இந்து, 1995, பூரட்டாதி, PHD, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. கொக்குவில், இந்து, 1990, கேட்டை, Phd, கனடா Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(46762)
6. இணுவில் - உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters in Accountancy, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (45173)
7. காரைநகர், இந்து, 1979, உத்தரம், Engineer, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(44877)
8. மாதகல், இந்து, 1993, விசாகம், A/L, Marketing Manager, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(44324)
9. புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(44263)
10. இடைக்காடு - காரைநகர், இந்து, 1992, சித்திரை, MBBS Doctor, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (44087)

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும், மணப்பெண்களும் உண்டு

(885)

**S.Sharma J.P**
www.thaalee.com
077 539 3728

## கணனித் தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணனித் தட்டெழுத்தாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(3515)

தொடர்பு : **077 129 9519**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளைக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(3455)

Whatsapp: **077 756 3781**
jenyjude77@yahoo.com

## மேற்பார்வையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு மேற்பார்வை யாளர்கள் தேவை. கணணி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரை அண்டியவர்கள் தொடர்பு கொள்ளவும். **நேர்முகத் தேர்வு 28.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00**

(C-2324)

**074 0567 791**

## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலிச் சந்தியில், அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(3509)

**074 38 25 961**
**076 91 97 566**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2338)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
1990 . 04 . 04

மறைவு
2022 . 02 . 26

அமரர்
**யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்**

காலச்சக்கரம் சுழன்றதுவோ - உன்
கால்களில் பந்துகள் சுழன்று
சிகரங்கள் தொட்ட
நின் சாதனைகள் - உம்
முகவரிகள் பகர்ந்து நின்றிடவே
பாதியில் பரிதவித்து
கிடக்கின்றதே...!

(3522)

"ராஜஸ்தான்"
கருணாநிதி ச.ச. நிலையம், வல்வெட்டி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
27 . 04 . 1950

மறைவு
21 . 02 . 2025

அமரர் **இரத்தினசிங்கம் வசந்தகுமாரி** (மணியக்கா)

அன்பாலும், அமுதாலும்
நிறைக்கும் அட்சயபாத்திரம்
இவள்!
இன்று!
உடல் துறந்து
இறைதேடி பயணிக்கிறது
உயிர்!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(3518)

தொடர்புக்கு :
திரு.மு.இரத்தினசிங்கம்
076 772 9591

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
நாகராஜா குடும்பத்தினர்

## விடுமுறை

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் மஹா சிவராத்திரி தினத்திற்கு மறுநாள் வியாழக்கிழமை(27) விடுமுறை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அதற்கான பதில் பாடசாலையானது சனிக்கிழமை (01) நடைபெறும் எனவும் அத்துடன் குறித்த மாகாணத்தில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் வழமை போல நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வீடு வாடகைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குஉண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(3520)

தொடர்புகளுக்கு
**077 710 9638**

## வேலைக்கு ஆட்கள் தேவை

இரும்புக் கடைக்கு ஆட்கள் தேவை. மின்வலு உபகரணப் பொருள் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3524)

**077 780 5950**

## பெண் வேலையாட்கள் தேவை

கோப்பாயில் இயங்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு தையல் வேலை தெரிந்த, பழக விரும்பும் வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு (C-2328)
**077 918 1090**

## குடைச்சுவாமி சேவை நாடி ஜோதிடம்

அன்பானவர்களே

உங்களது வீட்டின் வாஸ்து பார்க்கவும், தீய சக்திகளை இனம் காணவும் சாதக பலன் பார்க்கவும் தொடர்பு கொள்ள அழைக்கவும்.

(3503)

**077 491 1975, 077 477 9925**

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(884)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org